திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுரவேநம:.

# சிவஞாந விளக்கம்.

(முதற் பாகம்.)

இஃது

விருதை

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான யோகிகளால்

இயற்றப்பட்டு,

தூத்துக்குடி

சைவ சித்தாந்த சபையாரால்

வெளியிடப்பட்டது.


தூத்துக்குடி:

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 2.

1902.

ககூ-வது வருட) (புத்தக இல. உ)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுரவேநம:.

## சிறப்புப் பாயிரம்.

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"
ஸ்ரீலஸ்ரீ சூ. சோமசுந்தர நாயகரவர்களால்;
இயற்றப்பட்டது.

### நேரிசையாசிரியப்பா:

சீர்வளர்காழியிற் சேயெனப்போந்து,
மறக்கதவடைத்து மறைக்கதவந்திறந்து,
கூடலம்பதியிற் குழூமியசமணிருள்
வீடுறச்சைவத் துறையினிதுவிளங்கத்
திருவிளையாடல் புரிந்து,பரங்குன்றி
னினிதுவீற்றிருந்த வறுமுகத்தொருவ
னிவர்ந்தருள்பெருஞ்சிறப் புறுமொருதோகை
கொழும்பலவுசுமந்த பழம்பெரிதுபழுநி
விழும்பசுந்தேறல் செழுந்தடநிறைய
வார்தரவுண்டு களித்தலினேர்தர
வாணப்பைஞ்சிறை நன்கனம்விரித்து
மாணெழிலுண்கட் டுவர்வாய்ப்பூணுறு
வம்புவிசித்தியாத்த பொம்மலிளமுலைப்
பைந்தொடிமகளிரிற் பயிர்ந்தனவகவ,
வாங்கத்தடத்திற் பாசடைநிவந்த
தேங்கமழ்தாமரைத் திருந்தவீற்றிருக்கு
மஞ்சிறையன்னங் காணரசாக
வண்டினம்யாழ்செயக் கருங்குயில்கூவத்
தென்றலஞ்சிறுவ[illegible]லர்ப்பொதியவிழ்த்து
நறுவிரைப்பொ[illegible]ன்றுகள் பரப்பினன்வரூஉம்

பெருமுறையாங்கிற் பொலியுமலர்ப்பொழில்
வீறுபெறவளைஇத் தோன்றும்விருதைச்
சிவஞானம்பழுத்த சிவஞானமுனிவர
னருங்கலையுணர்ந்த பெருந்தவக்குன்றம்
வழுத்தப்படுவோன் சிவனெனக்கிளக்கு
மிழுக்கில்வேதப் பொருளுரைதேர்ந்தோன்
பொய்ந்நெறிப்படிற்றுரை புரையறநூறி
மெய்ந்நெறிச்சைவம் விளக்குறுமேலோன்
வழுத்துவோன்மாலென மாமறைகூறு
மொழிப்பொருளுணரா வழக்கினராகியுங்
கருநாயம்பெருக்குங் கலிமாந்தராயும்
வேதநெறிபிழைக்கும் பாதகராகியு
முயிரியல்பறியா துளறிகாணுவாய்ச்
செயிருறவுரைக்கும் செய்கையராகியு
முடைமையாகிய வோருயிர்ப்பொருளை
யுடையனாகிய விறையெனக்கொண்டு
மறுகிச்சுழலு மறிவினராகியு
மக்கட்பிறவிப் பயன்பெரிதிழக்கும்
பொக்கப்பொய்ந்நெறிப் பூரியராவா
ரிசைநெறிவிரும்பும் பெற்றியுமிசைபெற
விசைக்குஞ்செய்யுளு நும்மிறைக்கிலவென்
றெம்மைப்புறம்பழித் தெள்ளினராகச்
செம்மைமனம்புழுங்கி யின்னாதுகிளக்கு
மற்றவர்பொய்யுரை போழ்படமறுத்துக்
கற்றவர்வியப்பவு கற்றவர்வாழ்த்தவுஞ்
செழுந்தமிழ்கடையி னலம்பலமலியக்
கொழுந்தமிழ்நூலோன் றியற்றினன்விழுமிய
துறவொழுக்கிகவாச்சிறப்பி
னறவுரைதேருமவ் வருந்தவத்தோ[illegible]

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகரவர்கள் மாணாக்கரும், சென்னை
கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய நாகபட்டினம்
மக-ள-ள-ஸ்ரீ வேதாசலம்பிள்ளையவர்களால்
இயற்றப்பட்டது.

சீர்கொண்ட வளிக்குலங்கள் செழுந்தருவு நறுமலர்க்க ண்
ணீர்கொண்டு கரைந்துருக நிகழ்த்துமிசைக் குவப்பெய் தி
வார்கொண்ட சடைமுடியெம் வள்ளலைப்போல் வண்கொன் றை
யேர்கொண்ட பொன்சொரியு மெழிற்பொழில்சூழ் விருதையூர்.()

இனையவளம் பதிதன்னு ளினியதமிழ்ப் பனுவலினு ங்
கனைகடலின் விரிவுடைய காமர்வட மொழித்துறையு ந்
தனைநிகர்ப்பா ரிலாராகத் தனிவிளங்கு சிவஞா ன
முனைவனையே யொத்துளார் சிவஞானயோகியார். (௨)

உலகமெனும் பூம்பிடகை பொலிர்சைவ மணிமைமரு ட்
கலகநெறிப் புறச்சமயக் கனையிருள் வாய்ப்பெயுங்கா லை
யிலகறிவுந் தடந்தோளு மெழில்வடிவும் பெருங்கரு ணை
யுலவுதிரு விழியிணையு மெய்யுடைய வரவடியும். (௩)

உளமுருகுங் கட்டுரையு முயர்கலையின் றெளிவுரையு ம்
பளகறுநன் ஞுவுரையும் விழுமியபற் பலநடையு ம்
வளமுறவொன் றுறுமாற்றுற் போந்தருளி வழங்கிரு ளை
யிளவளஞா யிறுபோலப் புறச்சமய விருள்பாறி. (௪)

தலையாய சைவமணி தொன்மைபோற் றயங்குறவி ப்
புலையாயிற் கடையேழும் போந்ததனைப் பெறவிளக்கு ம்
துலையாவை யுறழ்சோம சுந்தரமா மெங்கள் பெரு ந்
தலைநாயன் பெருங்கேண்மை பெருந்திருவுந் தலைக்கொண்டார்.()

ஆண்டகையா மவன்கேண்மை கொண்டதனுக் கடுத்த வா
றீண்டுவலைச் சமயநெறி மாழாக்கு மியல்பினு ர்
வேண்டுவன வேண்[illegible]யதலுறுந் தவமுடையா ர்
தூண்டுமனச்செயல்செறிகருந் துறவொழுக்கமேற்கொண்டார்.( )

மும்மறையி னடுக்கிடந்த விரண்டெழுத்தே மொழிகுவா ர்
செம்மைநெறித் திருத்தொண்டிற் பிறைசெயலை சிறந்துளா ர்
தம்மனத்தைச் சிவபெருமான் றிருவடிக்கீழ்த் தவிசா க
மெய்ம்மையே யிடுவித்தா ரெமையுடைய மேன்மையார். (எ)

என்னுரையி லமையாத வினையபுக ழியோகி யா
ரின்னிசைப்பண் விரும்புதலு மிசைப்பாட்டு நம்பெருமா ற்
கென்னுளு மிலவென்றே யிழுங்குநெறிப் பாகவத ர்
சொன்னவி னுரைகேட்டுத் துளக்கமுறு முளத்தினர். (அ)

முத்திறத்துத் தமிழ்மலய முனிக்கிறைவ னுரைத்ததுவு ம்
வித்தியா தரரிருவர் விளங்குசெவி யிருத்திய து
மெத்துபுக ழிலங்கையர்கோன் மிகப்பாடி யுய்ந்தது வு
மெத்துணையு மறியாத வேழையர்க்கு மிகப்பரிவார். (கூ)

இழுக்குநெறிப் பாகவத ரியம்புமுரை யெஞ்ஞான்று ம்
வழுக்குரையாம் படிதெளிய வளமுடைய செழுந்தமிழி ன்
வழக்குநடை யிந்நூலை மறைமுதலா மருங்கலையி ன்
விருப்பமுறு மேற்கோளும் வியற்றமிழிற் காட்டுகளும். (ய

எழுவாயும் வேற்றுமையு மென்றுரைக்குங் காட்சியொ டு
வழுவாத வைந்துறுப்பால் வருங்கருத்தும் வேறுரைக் கு
மு ழுவாய்மை யுரைமூன்று மிடைவிரவ முரணுவா ர்
பழுதுடைய கோள்களைந்து பாங்குபெற வியற்றினர். (யக)

வேறு.

பாழ்படு நெறியெலாம் பாறிச் சென்னியி ற்
போழ்படு விதுக்குறை சூடும் புங்கவ ற்
கூழ்படு மிசைவிருப் புண்மை காட்டி ய
சூழ்பொழில் விருதையூர் யோகி வாழியே. (யஉ)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குரவே நம:

# சிவகாந விளக்கம்.

## முதற்பாகம்.

"அளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாம் அருளுமாறே".

(1) கீதவித்தையிற் பிரசித்தான காயகர் (பாடகர்) ஒருவர் "இசையோடு பாடுங்கீர்த்தநங்களும் அக்கீர்த்தநங்களைப் பாடிச் செய்யும் பஜனையும் விஷ்ணுவுக்கே உரியன (2) சிவன் தியானசமாதிகளால் உபாசிக்கத்தக்கவன் ஆதலால் சிவனை இசையோடு புகழ்ந்துபாடிப் பஜனைசெய்யும் வழக்கம் முற்காலத்து இல்லை. அங்ஙனம் சிவனை இசையோடுபாடுவது நியாயமுமல்ல அதற்கு அநேக சாஸ்திர ஆதாரவுகளுமிருக்கின்றன. (3) தேவாரத்துக்குச் சமீபகாலத்தில் சில பண்டாரங்கள் இசை (பண்) ஏற்படுத்தியிருக்கிறார்கள் (4) பாகவதர் என்ற சொல் விஷ்ணுபக்தர்களுக்குப் பெயர். கானவித்வான்களுக்கும் பாகவதர் என்று பெயர் ஆதலால் இசையோடுபாடும்பாட்டு விஷ்ணுவுக்கே உரியது"

என்று பலவிடங்களில் பிரசங்கிப்பதாய்க் கேள்விப்படுகிறோம். பிரபுத்துவம் உடையவர்களெல்லாம் நூலுணர்வும் நுண்ணறிவும் பலசாத்திரவிசாரமும் உடையவர்களாயிருப்பதால், அத்தகையரிடம் இவர்செய்யும்பிரசங்கம் அன்னவர் உள்ளக்கருத்தை மாற்றும் வலியுடையதாகவாகாது. நூலுணர்ச்சிமிகுந்த ஏனையரும் இவர்மொழிக்கு மயங்கார். பாடகர் பலவிடங்களில் கல்விஞானம் இல்லாரிடமும் இங்ஙனங்கூறுவதாய்ச் செவியுறலால் அவரும் அவர்உபதேசவசப்பட்டோரும் உண்மையுறியாமைபால் பரமேசுரனைப்புகழ்ந்து பாடிச் சிவபுண்ணியம் ஈட்டலினின்றொழிதலோடு பரமேசுரனைப் புகழ்ந்து பாடும் சத்கருமத்தைத்தடுத்துங்கெடுத்த பெரும்பாவத்தையும் அடைவார்கள். ஆதலால் அன்னவர் உய்யு

நெறி கூடுமாறு செய்ய நமக்குண்டான கருணையால் இஃதெழுத இறகேந்தினம். "தருமத்தைச்சொல்லாதவர்கள் பெரியோர்கள் அல்ல" என்ற பாரத வசனவிதியால்.

பாடகருக்குப்பரமேசுரனை இசையோடு பாடப்பிரியமில்லாவிடினும் அங்ஙனம் புரிவாரைத் தடுக்காமலாவது சிவனைக்கானத்தோடு தோத்திரித்தலை அசாஸ்திரீக நூதன வழக்கமென்று தூஷியாமலாவது இருக்கக்கூடாதா? காயகரது கீதவித்தையிலுள்ள வன்மையைப்பற்றி யாம் விசாரிக்கப்புகுந்திலம். இவருக்கு அதில் விசேஷஞானமிருந்தாலும் இருக்கட்டும். இவர் அம்மட்டோடு மகிழாது தேவதா உபாசனு லக்ஷணங்களை விவகரிக்கப்புகுந்து சிவதூஷணையிலிறங்கியதால் அதைப்பரிகரித்து உண்மையை நாட்டக்கருதினம்.

காயகரும் அவர்வழிப்பட்டோரும் சித்தசமானத்தோடு கேட்டுக் குணப்பட்டுய்யட்டும், அல்லது இசையோடு பரமேசுரனைப் பாடுதல்கூடாது என்பதுமுதலிய தமது அபிப்பிராயத்துக்குத்தாம் படித்தநூலை வெளியிட்டுத்தமது கூற்றை நிலைநிறுத்திக்கொள்ளட்டும்.

பாடகர் வசகம்.

(1-வது) "இசையோடு பாடுங் கீர்த்தநங்களும் அக்கீர்த்தநங்களைப்பாடிச் செய்யும் பஜனையும் விஷ்ணுவுக்கே உரியன" என்பது. இந்த வசனம் மற்ற மூர்த்திகளோடு மூர்த்தித்திரையாதீதரான பரமேசுரனையும் இசையோடு பாடிப் புகழப்படற்குரியரல்லரென விலக்குகின்றது. பரமேசுரத்தோத்திரமாகிய இசையோடுகூடிய சாமவேதகானமும், இசைவேதமாகியகாந்தருவவேதமும், புராதீனமாகிய பரமேசுரவிஷயமான இசையோடுகூடிய கீர்த்தனங்களும், பாக்களும் "ஸாமப்பிரியாயநம:" "ஸாமகானப்பிரியாயநம:" "ஸாமசம்ஸ்துதாயநம:" என்ற சிவ அஷ்டோத்தரசத, நடராஜசகஸ்திரநாமங்களும் காயகரது தேற்றேகாரத்தை மாற்றிச் சிவன்இசையோடுபாடிப்புகழ்தற்குரியரென்பதை விளக்கும். இம்மட்டோடமையாது ஜகத்ரக்ஷகனும், கருணாமூர்த்தியும், இந்திராதிதேவர்களைக்காட்டிலும் அதிசிரேஷ்டரும், தம்மைப்பக்திசெய்வாருக்குத் தமது சாலோக சாமீப சாரூப பதவிகளாகிய அபரமுத்திகளைக் கொடுக்கத்தக்கவரும் வைதீக சுத்தாத்வைத

சித்தாந்தசைவர்களால் பஞ்சாவரணபூஜையில் பூஜிக்கத்தக்கவ ரும் ஆகிய விஷ்ணுபிரானை இசையோடு பாடிப்புகழ்தல் எத்த கைப்பாரிபாகிகளுக்கு முக்கியம் என்ற சங்கையை யெழுப்பி விவ கரிக்க (விஷ்ணுபிரான் நமக்கும் உபாசனாமூர்த்திகளிலொருவரா யிருப்பதால்) ப்பிரியமில்லாமல் "இசையோடு பாடும் கீர்த்தனங் களும் அக்கீர்த்தனங்கள் பாடிச்செய்யும் பஜனையும் விஷ்ணுவுக் கே உரியன என்பதை விஷ்ணுவுக்கும் உரியன எனத்திருத்திவிடு கின்றோம். அங்ஙனந்திருத்துவது பாடகருக்குச் சம்மதமில்லாவி டில் அவரது (2) வது வாக்கியத்தைப்பற்றி யாம் விவகரிப்பதை வாசித்துச் சமாதானமடைவாராக.

பிதா, இராஜா இவர்கள் முன்னிலையில் ஒரு அடிமையை உ னக்கு உனது பிதா சிரேஷ்டமானவரா? இராஜா சிரேஷ்டமான வரா? என்று கேட்டால் இராஜா தனக்கும் பிதாவுக்கும் சிரேஷ்ட ராதலாலும் பிதா சிரேஷ்டரென்றோராமற் சொன்னால் இராஜ கோபத்தால் தனக்கும் பிதாவுக்கும் ஹானி நேரிடுமாதலாலும், இராஜா தான் சிரேஷ்டர் என்று கூறுவான். அங்ஙனம் மகன் கூ றலுக்குப் பிதா சந்தோஷிப்பர், அதுபோல் விஷ்ணு பிதா, பர மேசுரன் இராஜா இவர்களினுயர்வுதாழ்வுகளைப் பேசநேரிட்ட சமயத்துச் சிவசர்வோத்தமங்கூறத்தான் நேரிடும். சிவபிரான் நமக்கும் விஷ்ணுமூர்த்திக்கும் சிரேஷ்டனாதலால் முனிவடை யாது உண்மையுரைத்த நன்மைக்காக விஷ்ணுபிரான் அருளும் புரிவர் என்பது திண்ணம். இவ்வுண்மைபற்றியே விவகரிக்கவே ண்டிய அவசியம் வந்ததால் உண்மைநூல்களின் கருத்தை 2-வது வாக்கியத்துக்குச் சமாதானங்கூறுமமையத்துக் கூறப்போகின் றோம். அதனை விண்டு தூஷணையென்றுகொள்ளாது உண்மையை க்கைக்கொள்வரறிவின் முதிர்ந்தோர்.

உபாசிக்கத்தக்க மூர்த்திகள் யாவர்? பிரமோபாசனையாது? உபாசிக்கும் மார்க்கங்கள் எத்தனை? எந்த எந்த மார்க்கத்தில் எப் படி எப்படி உபாசிப்பது? என மெய்ந்நூல்களாலுணராரே "இசை———————— விஷ்ணுவுக்கே உரியன" என்றுகூறுவர் என்று சாத்திரஞானமுள்ளார் அறியாமற்போகார்.

இவ்து "சிவன் தியானசமாதிகளால் உபாசிக்கத்தக்கவன் ஆகலால் சிவனை இசையோடு புகழ்ந்துபாடிப் பஜனைசெய்யும் வழக்கம் முற்காலத்து இல்லை, அங்ஙனம் இசையோடுபாடுவது நியாயமும ல்லஅதற்கு அநேக சாஸ்திர ஆதாவுகளுமிருக்கின்றன" என்பது.

அந்தோ! சிவபிரானையடையும் மார்க்கங்கள் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு. இந்நான்கு மார்க்கங்களிலும் சைவர் (சிவபக்தர்) இருக்கலாம். அவர்களில் யோகமார்க்கத்தார் மாத்திரமே தியானசமாதிகளிற் பயில்வோர். ஏனையர் சிவனைப்பு கழ்ந்துபாடல் முதலியவேறு மார்க்கங்களால் அடையத்தக்கவர் என்பது படியாதவரும் தெரிந்தவிஷயம். இவர் இம்மட்டுந்தெரியா மலா கூறினர். ஆச்சரியம்! ஆச்சரியம்!!.

சிவபிரானுயர்வு.

பிரபுக்கள் சிற்றரசர் தேசாதிபதிகள் தத்தமக்குட்பட்டவர் களாலன்றி யேனையரால் வணங்கப்படார். ஏகச்சக்ராதிபதித்வ முடைய ஒருவன் மாத்திரமே தன்னுற்றொழப்படுவாரின்றியெல் லவருந் தன்னைத்தொழத் தகுதியுடையவனுவன். அதுபோல பிர்மா விஷ்ணு ருத்திரர் இந்திரன்முதலிய தேவர்களனைவரும் தத்தமக்குக் கீழ்ப்பட்டவர்களாற் றொழப்பட்டுத் தத்தமக்கு மே ற்பட்ட தேவர்களைத் தொழுகின்றனர். சருவகாரணனும் சர்வ லோகசரண்யனும் திரிமூர்த்தியுத்தீர்ணனும் தேவாதி தேவ மகா தேவனும் ஆகிய சிவபெருமான் ஒருவனே தான் றொழப்படுவாரி ன்றித் தன்னையே விஷ்ணுவாதி சகலதேவருந்தொழத்தகுதியு டையான். திரிகாலத்தும் சகலராலுந்தொழப்படுபவன். ஆதலா ல் தருமார்த்த காம மோக்ஷமெனனும் புருடார்த்தங்கள் நான்கில் விருப்புடையார் அனைவரும் பசுபதியையே தொழத்தக்கவர்களா வர். ஜீவர்கள் (பசுக்கள்) பற்பல கரும தாரதம்மிய முடையவர்க ளாதலால் அவர்கள் கன்மத்துக்கேற்றபடி பலமதங்களிற்புகுந்து அற்ப பலன்களையும் விரும்பி அற்பதெய்வங்களைத் தொழாநிற்பர். அன்னவர் புண்ணியத்துக்கேற்பப் போகந்துய்த்து மீட்டும் ஜநந மரணச்சுழற்சியிலாழ்ந்து அபரமுத்திகளையடைவர். சிவபரம்பொ ருளையன்றி யீறற்றபரமுத்தி சித்தியாது.

இதற்கு அதர்வசிகை.

"ப்ரம்ஹவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே காரணம், காரணந்துத்யேயஸ் ஸர்வைச்வர்ய ஸம்பந்ந சர்வேச்வரச் சம்புராகாச மத்யே"

'பிரமன் விஷ்ணு ருத்திரன் இந்திரன் இவர்கள் உண்டானவர்கள் (பிறந்தவர்) காரணரல்லர், காரணரும் சர்வைசுவரிய சம்பந்தரும், சர்வேச்சுரரும், இருதயாகாசமத்தியிலிருப்பவரும் ஆகிய சம்புவானவர் தியானஞ்செய்யத்தகுந்தவர்'

பஞ்சப்பிர்மோபநிஷத்து.

"துரீயம்ப்ரம்ஹஸம்ஞிதம் பிர்ம்ஹவிஷ்ணவாதி பிஸ்ஸேவ்யம்"

"நான்காவதானது பிர்ம்மமென்னும் பெயரையுடையது, பிர்ம்மவிஷ்ணுமுதலியவரால் சேவிக்கத்தக்கது."

சுவேதாசுவதரச்சுருதி.

"ஸர்வஸ்யப்ரபுமீசாநம்" 'சர்வத்துக்கும் பிரபுவாகிய ஈசானனே

அதர்வசிகை.

"சிவ ஏகோத்யேய:, சிவங்கர: சர்வமந்யத்பரித்யஜ்ய" "மற்ற எல்லாரையும் (பிர்ம விஷ்ணு ருத்ர இந்திராதிபர்பரவரையும்) வர்ஜித்து சிவன் ஒருவனே தியானஞ்செய்யத்தகுந்தவன்"

சுவேதாசுவதரம்.

"யதாசர்மவதாகாசவேஷ்டயிஷ்யந்திமாநவா: ததாசிவமவிக்ஞாய துக்கஸ்யாந்தோபவிஷ்யதி" "மனிதர்கள் ஆகாயத்தைத் தோல்போல் எப்பொழுது சுற்றுவார்களோ அப்பொழுது சிவனையறியாமல் துக்கநிவிர்த்தியுண்டாம்"

புருஷ சூக்தம்.

"அம்ருதஸ்ய ஈசாந:" "மோக்ஷத்துக்கு ஈசானன்"

ருக்வேதசம்ஹிதை.

"தவசரீயேமருதோமர்ஜயந்தருத்ராயத்தேஜஸிமசாருசித்ரம் பதயத்விஷ்ணோ ருபமம்பதாயிதே நபாஸிகுஹ்யம் நாமகோநாம்" (கருத்து) "சமஸ்ததேவர்களும் சிவலிங்காராதனைத்தால் தங்களை

வரியங்களை அடைந்தார்கள். லட்சுமி சமேதராகிய விஷ்ணு சிவ லிங்க பூஜைசெய்து பரமபதத்தையடைந்தார்" இன்னும்,

"ஸஏகோருத்ரோத்யேய:" "த்யாயீதேசாநம்" "பரமாத்மா மஹேச்வர:" ஹேபாந்விஷ்ண்வாதிகாந்சுராந்" முதலிய பலசுருதி வசநங்களும்.

பகவத்கீதையில் கிருஷ்ணன் அருச்சுனர்குபதேசித்தது.

"ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுநதிஷ்டதி, பாமயந்ஸர்வபூதாநியந்த்ராரூடாநிமாயயா, தமேவசரணங்கச்ச ஸர்வபாவேநபாரத, தத்ப்ரஸாதாத்பராம் சாந்திம், ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்"

"அருச்சுன [மாயையாகிற]இயந்திரத்தை அடைந்திருக்கிற சகல பிராணிகளையும் மாயையால் சுழற்றிக்கொண்டு சகலஜீவர்களுடைய இருதயத்தில் ஈசுரன் இருக்கிறான், சகலதன்மையாலும் அவனையே சரணமடை. அந்த ஈசுரனுடைய அநுக்கிரஹத்தால் மேலான சாந்தியையும் சாசுவதமான ஸ்தானத்தையும் அடைவாயாக."

கீதையில் கண்ணன்.

"தமேவசாத்யம்புருஷம்ப்ரபத்யே" சாதிக்கத்தகுந்தவனான 'அந்தப்புருஷனையே நான் சரணம் அடைகிறேன்"

பாரதம்.

"யஸ்யபிர்மாசவிஷ்ணுச்சத்வஞ்சசக்ரசகாமரை: அர்ச்சயர்வம் சதாலிங்கம் தஸ்மாச்ரேஷ்டதரோஹிக:' 'ஓ இந்திரா! பரமசிவனுடைய லிங்கத்தை பிர்மாவும் விஷ்ணுவும் சகல தேவர்களோடு நீயும் எப்பொழுதும் அருச்சியுங்கள் அவனைக்காட்டிலுஞ் சிறந்தவர் யார்'

'வாஸுதேவஸ்துதம்த்ருஷ்ட்வா, ஜகாமசிரஸாக்ஷிதம், பார்த்தேகஸஹதர்மாத்மா, க்ருஷ்ணங்ப்ரம்ஹஸநாதநம், லோகாதிம் விச்வகர்மாண, மஜமீசாநசமவ்யயம்' தருமாத்மாவும், வாசுதேவனும் ஆன கிருஷ்ணன் புராணபுருஷரும் உலகத்துக்கு முதல்வரு

ம், சருவத்தைச்செய்பவரும் பிறப்பற்றவரும் நாசமற்றவரும் பரப் பிர்மசொரூபியும் தனக்கு நேத்திரத்தைக்கொடுத்தவரும் ஆகிய அந்தப்பரமேசுரனை அருச்சுனனோடு சிரசால் வந்தித்தான்'

வாமனபுராணம்.

'சிவஸ்யபூஜபதேலிங்கம் சர்வைர்த்தேவைஸ்ஸஹாஸுரை: சிவேநபூஜித: கோவாவதந்துப்ரதிவாதிந:' சிவபிரான் சகலதேவா சுரமனுஷ்யர்களாலும் பூஜிக்கப்படுகிறான், சிவனால் பூஜிக்கப்பட்டவன் யாவன் பிரதிவாதிகள் சொல்லட்டும்' எனக்கூறுகின்றன.

இவ்விதம் சிவசர்வோத்தமத்தைக்கூறும் வசநங்கள் ஆயிரக் கணக்கிலிருக்கின்றன இக்கருத்துக்கிணங்க.

திராவிடச்சுருதி திருநாவுக்கரசுசுவாமிகள்.

'தாமார்க்குங்குடியல்லாத் தன்மையரான சங்கரன்' 'மூவுருவின் முதலுருவாய்' 'மூவர்க்குமுதல்வன்றனை'.

மாணிக்கவாசகசுவாமிகள்.

'மேதவர்கோவறியாததேவதேவன்செழும்பொழில்கள்பயந்து காத்தழிக்குமற்றை, மூவர்கோனாய்நின்றமுதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்தெந்தை'

திருமந்திரம்.

"அவனையொழியவமரருமில்லை
அவனன்றிச்செய்யுமருந்தவமில்லை
அவனன்றிமூவராலாவதொன்றில்லை
அவனன்றியூர்புகுமாறறியேனே'

"முன்னையொப்பாயுள்ள மூவர்க்குமூத்தவன் தன்னையொப் பாயொன்றுமில்லாததலைமகன்'

'என்னாற்றொழப்படுமெம்மிறை மற்றவன்
நன்னாற்றொழப்படுவாரில்லைதானே'

இவ்வுண்மையை விரிவாயறியவிரும்புவோர் அப்பயதீக்ஷித சுவாமிகள் பிர்மதர்க்கஸ்தவம் சிவகர்ணாமிர்தம் முதலிய கிரந்தங் களையும், வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீ சோமசுந்த ரநாயகரவர்கள் சிவாதிக்யரத்நாவளி சைவசூளாமணி கூரேசவிஜ யபங்கம் முதலிய கிரந்தங்களையும் வாசித்தறிக.

பிர்மாவிஷ்ணு ருத்திராதிதேவர்கள் தங்களை உபாசிப்பவர்களுக்குத் தத்தம் முத்தியைக்கொடுப்பார். அவைகள் ஈறுடைத்தாதலால் அபரமுத்திகள் என்னப்படும். பரமுத்தியைவிரும்பிய பசுத்வமுடைய யாவரும் பரமேசுரனொருவனையே சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னப்படும் தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கங்களால் உபாசித்து (அததற்குரிய சிவசாலோக சிவசாமீப்ய சிவசாரூப்ய சிவசாயுஜ்யமென்னும் பரமுத்திகளை) அடைவார்கள். பரதந்திரன், அகர்த்தா, புருடன், ஜீவன் ஆகிய பரியாய நாமங்களையுடைய பசுக்கள் அநேகர். அவர்மலமுடைத்தாரதம்மியத்தால் முத்திறப்படும் அஷ்டவித்தியேசுரர், அணு சதாசிவர், சத்தகோடி மகாமந்திரர், நூற்றுப்பதினெட்டு உருத்திரர், புவனகருத்தர், பிர்மா, விஷ்ணு, இந்திரன், வருணன், அக்கினியாதி தேவர்கள், மானிடர் மிருகம் பக்ஷி கிருமி யீருகச்சனன மரணங்களையுடைய அணுக்களாகிய பிராணிகள் அனைவரும். இப்பசுக்களுக்குத் தநுகரணபுவனாதிகளுக்குப் பிரதானகாரணமாயுள்ளது ஆணவம்கன்மம் சுத்தமாயை அசுத்தமாயை திரோதாயி என ஐவகைப்படும் பாசம். ஜீவர்களைப்பாகப்படுத்தி முத்தியருளுதற்காக முத்தொழிற்படுத்தியாளும் மூலகாரணனும் 'ஏகமேவாத்விதீயம் பிர்மம்' என்ற மகா வாக்கியத்துக்கு வாச்சியமாய் சச்சிதானந்த சொரூபியாய் சருவேச்சுரத்வாதிஷட்குண சம்பூர்ணனும் விளங்கும் பரமேசுரனொருவனே பதி. மற்றைய பிர்மா விஷ்ணுவாதி தேவர்கள் பதியால திஷ்டிக்கப்பட்டு பதியின் அம்சபூதரென்னத் தக்கவராய் சிற்றரசர் தேசாதிபதிகள் மந்திரியாதியர் ஏகசக்ராதிபதியின் ஆணைவழிநின்று தத்தமையடைந்தார்க்கு வேண்டிய தம்மாலியன்றபலன்களைத்தரல்போல், தம்மைவணங்கினோர்க்குப் பதியின் ஆணைவழிநின்று தம்மாலியன்ற அபரமுத்திகளைக்கொடுக்க வல்லுநராவர். அன்னவர் உபாசனைகளபரமுத்தியைத்தரும். அன்றியும் சிவோபாசனைக்கு பரம்பரா சாதனங்களாகவும்ஆம். ஆதலால் பிர்ம விஷ்ணு ருத்திர இந்திர அக்கினி சூரியனாதி தேவர்களுடைய உபாசனைகள் கீழ்ப்பட்டபரிபாகிகளுக்கே அவசியமாம். மேற்பட்ட பரிபாகிகளுக்கு பரமேசுர உபாசனையேமுக்கியம்.

அன்னவர்க்கு அவ்வனதுஆணைவழிநிற்கும் விண்டுவாதிமூர்த்திகளுபாசனையும் நன்மையேபயக்கும்; அன்னவர் (அம்மூர்த்திகள்) பதியோட பேதமாய்ப்பாவிக்கத்தக்க உபாசகர்களாகலின். ஆதலால சிவோபாசனைக்கதிகாரிகள் அஷ்டவித்தியேசுராராதி முற்கூறிய ஜிவர்கள் அனைவருமே.

இதற்கு.

சுருதி. "நாராயணபரோத்யாதா" "நாராயணன் மேலான உபாசகன்" (உபாசிக்கிறவன்)

"சிவ ஏகோத்யேய:" சிவனொருவனே தியானிக்கத்தக்கவன் (தியானிக்கப்படததக்கவன்)

"ஆத்மா நாராயண: பர:" மேலான நாராயணன் ஆத்மா

"பரமாத்மாமஹேச்வர:" "மஹேசுரன் பரமாத்மா"

பாரதம் (சௌளுப்திகபர்வம்).

"ஸத்யசௌசார்ஜவத்யாகைஸ்தபஸாநியமேநச, க்ஷாந்த்யா பக்த்யாசத்ருத்யாசகர்மணுமநஸாகிரா"

"அஹம்யதாவதாவதாராத்ய:, க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா, தஸ்மாதிஷ்டதம: கிருஷ்ணாதந்யோமமநவித்யதே"

(அசுவத்தாமனைப்பார்த்துச் சிவனார்சொல்லியது) "நான் குற்றமற்ற தொழிலையுடைய கிருஷ்ணனால் சத்தியம் சௌசம் ஆர்ஜவம் தியாகம் தபசு நியமம் க்ஷமை பத்தி தைரியம் கருமம் மனசு வாக்கு முதலியவைகளால் கிரமப்படி ஆராதிக்கப்படுகிறேன்; ஆனதால் எனக்குக் கிருஷ்ணனைக்காட்டிலும் மேலான அன்பன் மற்றொருவனுமில்லை".

பாரதம்.

"ஜந்மகர்மதபோயோகா, தயோஸ்தவசபுஷ்கலா:, தாப்யாம் லிங்கேர்ச்சிதச்சம்பு:— த்வயார், ச்சாயாம்விசேஷத:" (வியாசர் அசுவத்தாமனை நோக்கி உனக்கு உற்பத்தி கர்மம் தபசுயோகம் முதலியவை கிருஷ்ணார்ச்சுனனைப்போலப் பூரணமாயிருக்கின்றன. ஆகிலும் அந்தக்கிருஷ்ணார்ச்சுனர்கள் சிவலிங்கத்தினிடமாகப் பரமசிவாராதனஞ்செய்தார்கள்: நீர் விக்கிரகவடிவத்தில் ஆராதனஞ்செய்தீர்.

"ததோங்வடச்யத்கிரிசஸ்யவாமே, ஸ்வாத்மாநமவ்யக்தமநந்த ரூபம், ஸ்துவந்தமீசம்பஹுபிர்வசோபிச், சங்கரஸி சக்ரார்ப்பிதசார்ங்கஹஸ்தம்."

கிருஷ்ணமூர்த்தியின் தவத்துக்குச் சந்தோஷித்துச் சிவபெருமான் அநுக்கிரகார்த்தமாய் வெளிப்பட்ட அவசரத்தில், பின்பு பரமசிவனது இடது பாகத்தில் பற்றற்றவனும் அநந்தரூபனும் அநேகவசனங்களால் பரமேசுரனைத் துதிக்கின்றவனும், சங்கு கத்தி சக்கரம் வில் இவைகளையுடையவனும் ஆனதன்னுருவத்தை (மூலவிஷ்ணுவை) ப்பார்த்தார்.

இவைகட்கிணங்கத் திராவிடச்சுருதி.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

செத்துச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
அத்தனென்றரியோடுபிரமனுந்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே.

திருமந்திரம்.

போற்றியென்பாரமரர்புனிதன்னடி
போற்றியென்பாரசுரர்புனிதன்னடி
போற்றியென்பார்மனிதர்புனிதன்னடி
போற்றியென்னன்புள்விளங்கவைத்தேனே.

பிறப்பிலிபிஞ்ஞகன்பேரருளாள
னிறப்பிலியாவர்க்குமின்பமருளுந்
துறப்பிலிதன்னைத்தொழுமின்றொழுதான்
மறப்பிலிமாயாவிருத்தமுமாமே.

வணங்குமார்க்கங்கள்.

மேற்கூறிப்போந்தநியாயங்களால் விண்டுமூர்த்தியாதி தேவர்களும் சிவோபாசகர்களாதலால் சிவோபாசனையே யாவராலும் நிர்ப்பாதிதமாய்ப் புரியத்தக்க சருவோத்தமமான சத்கருமமென்று துணியப்படும். அவ்வுபாசனையும் சரியையாதி நால்வகைப்படும். ஜீவர்கள் தத்தம் பரிபாகத்துக்குத்தக்க மார்க்கங்களால் சிவோபாசனை செய்யத்தக்கவராவர். அவை,

சரியையாகிய தாசமார்க்கம், சிவாலயத்தில் திருவலகிடல், திருமெழுக்கிடல், மலர்கொய்து தொடுத்துச்சாத்தல், சிவபிரானைப்புகழ்ந்து பாடியாடல், திருவிளக்கிடல், அடியாரைவணங்கல் அதாவது காயத்தாற்பணிபுரிந்து வாக்காற் புகழ்ந்துபாடல்.

கிரியையாகிய புத்திரமார்க்கம் பூஜைக்குரிய திரவியங்களைச் சேகரித்து ஆன்மார்த்தசிவபூஜைசெய்து அருச்சித்துத் தோத்திரித்தல், அக்கினிகாரியஞ்செய்தல் அதாவது காயத்தால் பூஜைமுதலியகிரியைசெய்து வாக்காற்புகழ்ந்துபாடி மனத்தால் அன்பொடு ஜெபித்தல்.

யோகமாகிய சகமார்க்கம் காயத்தால் மனத்தால் அஷ்டாங்கயோகம் பயின்று சிவத்தைத் தியானித்துச் சமாதிகூடல்.

ஞானமாகிய சன்மார்க்கம் பசுபதிபாசவிசாரஞ்செய்து ஞாதுருஞானஞேயங்களறச் சிவத்தோடிரண்டறக்கலத்தல்.

சுருக்கமாய்க்கூறில் சரியையில் சிவத்தோத்திரமும் (ஈசுரபஜனையும்) கிரியையில் சிவபூஜையும் யோகத்தில் மனத்தைச் சிவத்தியானத்தில் நிலைக்கச்செய்தலும் ஞானத்தில் மனம் இழந்து சிவைக்ய மடைதலும் முக்கியங்களாம். சரியை கிரியைக்குக் கூறியசிவத்தோத்திரம் இசையறிந்தோ ரிசையோடும் இசையறியாதார் சாதாரணமாயும் புரியத்தக்கவர்.

சிவத்தோத்திரம் சரியைக்குமுக்கிய அங்கமாயினும் கிரியையில் உபாங்கமாயதறிக. யோக ஞானமார்க்கத்தவரும் ஈசனருளாலேயே தம் மார்க்கங்களில் சித்திபெறவேண்டுமாதலால் ஈசனருளடைதற்கும், அவர் பூதிர் முகப்படுங்கால் வேறு விஷயங்களில் மனஞ்செல்லாது ஈசுரசிந்தனையிற் பழகுதற்கும், சிவத்தோத்திரம் (சிவபஜனை)-செய்தல் அவசியம். இதற்கிணங்க அநேக யோகிகளும் ஞானிகளும் ரிஷிகளும் சிவத்தோத்திரகானஞ் செய்து ஆநந்தாதீதராய் கீர்த்தனஞ்செய்து உய்தி யெய்தியதாய்ப் பலபுராணாதாரங்களிருக்கின்றன. பிர்மா விஷ்ணு இந்திரன்முதலிய தேவர்களும் சிவபூஜை சிவகானஞ்செய்து தோத்திரித்து கீர்த்தனஞ்செய்து ஈசுராநுக்கிரகம் பெற்றதாய்ப்பல ஆதாரங்களிருக்கின்றன. முன்னும் உதகரித்திருக்கின்றோம். சிவபூஜைக்குரிய சோடசோபசாரங்களில் (2) உபசாரம் கானசம்மந்தம் என்றறிக.

மேற்கூறிய்போந்த நியாயங்களால் ஈசுரனைப்பாடிப்புகழ்தல் சரியாவான்முதல் ஞானி ஈறாக நான்குமார்க்கத்தவரும் அநுட்டிக்கவேண்டிய அவசியாவசிய சர்வாத்தமமான சத்கருமமென்று அறிஞர் யாவரும் நிர்ப்பாதிதமாய் ஒப்புக்கொள்ளத்தக்கது.

இங்ஙனம் உய்த்துணராது பாடகர் "எல்லிசெட்டிலெக்கஏக லெக்க" என்ற பழமொழிக்கிணங்கச் சிவன் தியானசமாதிகளால் உபாசிக்கத்தக்கவன் என்று சரியை கிரியைமார்க்கத்தவருக்கு ஒரு வழியுமின்றி அவர் மார்க்கங்களில் அடியோடு மண்போடமுயன்றனர். தியானசமாதிகள் பெரும்பாலும் துறவிகளால் அநுட்டிக்கத்தக்கனவென்பது படியாத கேவல ஜநங்களும் அறிந்தவிஷயம். பாடகர் பரமேசுரனைக்கானத்தோடு பாடித்தோத்திரிப்பதைத்தடுத்துக்கெடுக்கவேண்டுமென்கிற எண்ணத்தை யுள்வைத்துக்கொண்டு ஈசுரனை நிந்திபார்போலப்பேசி விஷ்ணுவுக்கே கானத்தோத்திரமுண்டென்று கூறினர்.

ஈசனைப்பாடித்தோத்திரித்தல் சரியாவானுக்குமுக்கியமாயும், கிரியாவானுக்கு உபாங்கமாயும், ஏனையருக்கு அவசிய சத்கருமமாயும், பிர்ம விஷ்ணு வாதியருக்குச்சுதருமமாயும் இருத்தல் முற்கூறிய நியாயங்களால் ஸ்பஷ்டமாகியது. ஆகவின் இனிஈசனருள்பெறுதற்குரிய கானம் (நல்லிசை) அல்லாதகானம் (தீயிசை) என்பவைகளைப்பற்றி விசாரிப்பாம்.

கானப்பகுப்பு.

வைதிககானம் வியாக்யாகானம், லௌகிககானம் கேவல லௌகிககானம் எனக்கானம் நான்குவகைப்படும்.

வைதிககானம் சாமவேதத்தைச் சுரத்தோடு கானஞ்செய்தலும், இருக்காதிவேதங்களை பிர்மா இருடியர்முதலியர்முகமாய் பரமேசுரன் வெளிப்படுத்தியதுபோல, ஆதிசங்கராபகவத்பாதாசாரியரால் சௌந்தரியலகிரியிற் றோத்திரிக்கப்பட்டவரும், பிர்மாவைச்சிறைவைத்தவரும், சுப்பிரமண்ய அவதாரமூர்த்தியாகிய திருஞானசம்பந்தசுவாமிகள் முதலியோர்முகமாய் வெளிப்படுத்திய் திராவிடச்சுருதி(தேவாரம்)யைப் பண்ணோடுபாடலுமாம். இவை இரண்டும் வெளிப்படும்பொழுதே இசையோடு வெளிப்பட்டன.

விஷ்ணுமூர்த்தி திராவிடச் சுருதியைப் பாராயணஞ்செய்து சிவசாரூபம்பெற்றதாக்காசிமான்மியத்துச்சொல்லப்படலாலும் (1) அகஸ்தியப்பிர்மரிஷியால் வியாலபமுனிவருக்குப் பாராயணஞ்செய்யத்திட்டிக்கொடுக்கப்பட்டதாலும் (2) திருமறைக்காட்டில் கீர்வாணவேதந்திருக்காப்பிட்ட கதவினைத்திறந்து தான் திராவிடரூபமாய் வெளிப்பட்டதைக் காட்டியதாலும் (3) அக்கினிகோத்திரியாகிய சிவபாதஹிருதயாதியர் அத்தியயனஞ்செய்து முத்திபெற்றமையாலும் (4) உலகிலுள்ள எல்லாச்சிவாலயங்களிலும் கீர்வாணவேதத்தோடு கானஞ்செய்யப்பட்டுவருவது பூர்வீக ஆசரணையாயிருப்பதாலும் (5) முக்திஸ்தலங்களில் ஒன்றாகிய சுருதியில் பிரசித்தமான திருவாரூர் முதலிய மகாக்ஷேத்திரங்களில் "ஈசாநஸ் ஸர்வவித்யாநாம் ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் பிர்மாதிபதிர் பிர்மஹணோதிபதிர் பிர்மஹாசிவோமே அஸ்து சதாசிவோம்" முதலிய கீர்வாணவேதமந்திரங்களோடு தீபாராதனகாலங்களில் கானம்பண்ணப்படுவது அநுபவப்பிரமாணமாதலாலும் (6) துவிஜோத்தமர்களாற் கானஞ்செய்யப்படுவதாலும் (7) அபயகுலசேகரசோழமகாராஜா, அநபாய சோழமகாராஜா முதலிய க்ஷத்திரியர் அத்தியயனஞ்செய்துவந்த சரித்திரங்களிருப்பதாலும் (8) உபமந்யுமகாரிஷியாதியராற் புகழப்பட்டிருப்பதாலும் (9) பெற்றான் சாம்பானுக்கு முத்திதந்த ஸ்ரீநீலகண்டமதஸ்தாபகசந்தானாசாரியராகிய கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர் முதலிய பிராமணோத்தமர்களும் ஓதிப்புகழ்ந்துபாடியிருப்பதாலும் (10) பெரியபுராணத்தில் "வேதந்தமிழால் விரித்தார்" "வண்டமிழாலெழுதுமறைமொழிந்தபிரான்" "தமிழ் வேதம்பாடினார்" 'பன்னுதமிழ்மறைப்பதிகம்' 'மிக்கசொற்றமிழினால் வேதமும்பாடினார்' 'தமிழ்மாமறைபாடி' முதலிய அநந்த வசனங்களாற் றமிழ்மறையென்று உறுதிகூறப்படலாலும் (11) என்பைப்பெண்ணாக்கல், மண்ணானபிள்ளையையழைத்தல், அனலைக்குளிர்வித்தலாதி அநந்த அற்புதங்களோடு தோன்றியதாதலாலும் (12) சகலவேதாகமோபநிடதங்களின் சித்தாந்த ஞான உண்மையே கூறலாலும் (13) சுப்பிர்மசொரூபமாகிய சுப்பிரமண்யாவதாரமான திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிக

ன்முதலியவர்களே இதை அத்தியயனஞ்செய்வோர் பரமுத்திவரையிலுள்ள சகல மங்களங்களையுமடைவரெனத் திருக்கடைக்காப்பு என்னப்பட்ட பலசுருதி கூறியிருப்பதாலும் (14) இன்னும் இத்தகைப் பலபிரபலப் பிரமாணங்களிருப்பதாலும் தமிழ்வேத (தேவாரம்) மும் வைதிக கானம் என்னப்பட்டது.

இனி வேதம் உபநிஷத்துக்களையும், அவதாரமூர்த்திகள் முகமாய் வெளிப்பட்ட தமிழ்ச்சுருதிகளையும் அத்தியயநம் பண்ணலும் வைதிககானம் ஆம்.

வியாக்யாகானம்-வடமொழியில் கத்யபத்யரூபமாகவும் தமிழில் வசனம் இயல்ரூபமாகவும் பரமேசுரனைப்புகழ்ந்து துதித்தல் வேதாகமசாரங்களை கானத்தோடு வியாக்கியானஞ்செய்து போதிப்பதும் வியாக்யாகானம் என்று சிவதருமோத்தரமுதலிய உபாகமங்களிற் பிரசித்தம்.

லௌகிககானம்- வியாக்யாகானஞ்செய்யச் சக்தர்களல்லாதார் கீர்வாணம் திராவிடம் (தமிழ்) முதலிய தத்தமக்குத்தெரிந்த பாஷையில் இசையோடுகூடிய பதம் கீர்த்தனமுதலிய பாட்டுகளால் பரமேசுரனைப் பக்தியோடு பாடித்துதித்தல்-கீதிகானம் என்னப்பட்ட இதனைப் பக்தியோடு அந்நியவிஷயங்களில் மனஞ்செல்லாது இடைவிடாது பயின்று ஏகாக்ரசித்தத்தை யடைவோர் சகல மங்களங்களையும் சிவைக்ய பலனையுமடைவர். அங்ஙனந் தாங்களே கவனஞ்செய்யவேலாதார் சிவபக்தர்களாற்செய்யப்பட்ட கீர்த்தனாதிகளைப்பாடினும் அப்பலனையே பெறுவர்.

ஸ்காந்தம்

(1) வயாக்யாகானேஷ்வசக்தஸ்து, சிவமுத்திஸ்யபக்தித:
லௌகிகீமபிவாகீதிம், குர்யந்நித்யமதந்த்ரித:
(2) கீதிகாநம்சிவப்ராப்தே, ஸாதராம்காரணம்பவேத்
கீதிகானேஷுயோகஸ்யாத், யோகாதேவசிவைக்யதா.
(3) கீதிக்ஞாயதியோகேந, ஸயாதிபரமேச்வரம்
ப்ரதிபந்தகபாகுள்யாத், தஸ்யைவாநுசரோபவேத்.

(1) வியாக்யாகானஞ்செய்யச் சக்தியற்றவன் சோம்பலில்லா

மல் பக்தியுடன் எப்பொழுதும் லௌகிககானத்தையாவது செய்ய வேண்டும்.

(2) கீதரூபமானகானம் (இசைரூபமானபாட்டு அதாவது லௌகிககானம்) சிவ்வீன யடைவதற்கு முக்கியகாரணம் ஆகிறது. கீதிகானத்தில் யோகம் உண்டாகிறது. யோகத்தால் சிவைக்யமுண்டாகிறது.

(3) கீதிகானத்தையறிந்தவன் பிரதிபந்தங்களினின்றும் விடுபட்டு பரமேசுரனையடைந்து அவனுக்கு அடிமையாகிறான்.

கீதிகானம் என்ற இரண்டு சப்தங்களும் கையென்ற தாதுவிற்பிறந்த பாட்டு என்ற பொருளுடையன. கீதிகானம் என்ற சொற்களில் கானம் என்ற சப்தத்துக்கு (இசை ரூபமான) தோத்திரமென இலக்ஷணையாற் பொருட்கொள்ளினுமேற்கும்.

வியாக்கியாகானம், லௌகிககானம் என்ற இரண்டையும் இயலாற்பரமனையேபாடுவார், இசையாற் பரமனையே பாடுவார் எனக்கொள்ளத்தக்கதாக ஒன்றுபடுத்தி ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி தமது திருவந்தாதியில் பரமனையே பாடுவார் புராணசாரமாக

தொகுத்தவடமொழிதென்மொழியாதொன்றுதோன்றியதே
மிகுத்தவியலிசையவ்வகைபாலவ் விண்டோயுநெற்றி
வகுத்தமதிற்றில்லையம்பலத்தான்மலர்ப்பாதங்கண்மே
லுகுத்தமனத்தொடும்பாடவல்லோரென்பருத்தமரே.

எனத்திருவாய் மலர்ந்தனர்.

மேற்கூறிய மூன்றினையும் வைதிககானம் லௌகிககானம் என இரண்டாகக்கூறுவர் ஒரு சாரார்.

பெரியபுராணம் பரமனையே பாடுவார் புராணம்.

தென்றமிழும்வடகலையுந்தேசிபமும்பேசுவன
மன்றினிடைநடம்புரியும்வள்ளலையேபொருளாக
வொன்றியமெய்யுணர்வோடுமுள்ளுருகிப்பாடுவார்
பன்றியுடன்புட்காணுப்பரமனையேபாடுவார்.

எனக்கூறப்பட்டது.

கேவல லௌகிககானம்-இசையை அதாவது சங்கீதத்தைப்பரமே சுரவிஷயமா யுபயோகப்படுத்தாமல் வேடிக்கையான சிங்காரம் கிர்த்தனம் நாடகம் முதலிய விஷயங்களில் உபயோகித்தல், நரஸ் தோத்திரத்தில் உபயோகித்தல் முதலியனவாம். கானத்தை சிங் கார விஷயாதிகளில் பிரயோகித்தல், பலவிடங்களிற்சென்று பாடி யாசித்தல், கூலிக்குப்பாடல் இவ் விதவிருத்திகளையுடைய பாடகர் காயகர்,குசீலர், பாணர் எனப்படுவர். ஈசுபஜனை செய்து ஜீவர்கள் உய்தற்காக அதாவது லோகோபகாரமாக ஈசுரனுலருளப்பட்ட சங்கீதத்தை மனதை மயக்கித் துர்வழியிற் செலுத்தற்கேதுவாகி ய சிங்காரமுதலியவற்றி லுபயோகிப்பதால் (பால்-சீனி மருந்துக ளோடுட்டப்பட்டால் தேக பலத்தையும் ரோகநிவிர்த்தியையுந்த ரும்; விஷம் பாஷாணங்களோ டூட்டப்பட்டால் ரோகத்துன்பத் தையும் மரணத்தையுந்தரும். அங்ஙனத் துர்வழியிற்பிரயோகித் தோர் பாலீய்ந்ததாற் புண்ணியமடையாமல் அத்தோடு தீயபதார் த்தஞ்சேர்த்ததால் பாவத்தையும் நரகத்தையுமே அடைவர். அது போல) அங்ஙனம் உபயோகிப்போர் பாவத்துக்காளாகி நரகத்துக் இரையாகின்றனர். ஆதலால் சங்கீதத்தை ஒருக்கால் (சிங்காராதி விஷயத்தில்) துர்ப்பிரயோகஞ்செய்யினும் அங்ஙனஞ்செய்தோர் பிராயச்சித்தஞ்செய்து புனிதராகவேண்டும். கானத்தைத் துர்ப் பிரயோகஞ்செய்வோர் தாங்கள் கெடுவதுமன்றி அநேகரையும் அதாவது அதைக்கேட்பவர் பார்ப்பவரையும் பாவத்துக்காளாக்கு வதால் அவர்கள் உபபாதகர்கள். அவர் திரவியம் பாவத்திரவியம். அவர் அன்னம் புசித்தல் அவரிடம் தானம் வாங்குதலாதி கூடா. அவர் தீயவர்.சிற்றினக்குழுவிற்சேர்ந்தவர். ஆதலால் அன்னவரை க்காணலும் அவர் வார்த்தைகளைக் காதிற் கேட்பதும் அவரைச் சிலாகிப்பதும் அவரோடிணங்கியிருத்தலும் கூடா என்று வேதம் ஆகமம் புராணம் ஸ்மிருதி நீதிநூல்களின் சித்தாந்தம்.

அவை வருமாறு:—

யஜுர்வேதம் "காயதச்சமத்தஸ்யசநப்ரதிக்ருஹ்யம்" பாடகன் மதங்கொண்டவன் இடத்திலிருந்து தானம் வாங்கக்கூடாது.

ஆகமம் சிவதருமோத்தரம் 'தேன்னேனவே பாடுமவர் ஆடுமவர்

வாளாற் சேவிப்பார் பூவிற்பார் செக்கார் சொக்கிடுவார் என்னுமி வர் எழுவாயர் அன்னுதியருந்தேன் இழுக்கான அனமுடலையழுக் காக்கிவிடுமே".

ஸ்காந்தம்

கேவலம்லௌகிகம்காகம், நகுர்யாத்மோஹதோபிவா

யதிகுர்யாத்ப்ரமாதேந, ப்ராயச்சித்திபவேத்விஜ:.

பிராமணன் ஆனவன் கேவலலௌகிக கானத்தை மோகத்தினுலா வது செய்யக்கூடாது. தவறிச்செய்வானுனல் பிராயச்சித்தம் செய்யவேண்டியவனுவான். மநுஸ்மிருதி உபபாதகம் உரைத்த பிரகாணத்தில் "அசச்சாஸ்த்ராதிகமநம் கௌசீலவ்யஸ்யசக்ரியா" கெட்டசாஸ்திரத்தை யோதுதல், கூத்தாடுதல், பாடுதல் உபபாதகத்தோடு கணக்கிடப்பட்டது.

திருவள்ளுவர் குறள் சிற்றினஞ்சேராமை அதி பரிமேலழகருரை அவதாரிகை.

'சிறியவினமாவது— நல்லதனலனும் தீயதன் நீமையும் இல்லென்போரும் விடரும் தூர்த்தரும் கடருமுள்ளிட்டகுழு'.

'சிற்றினமஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச்சூழ்ந்துவிடும்'

'நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு'

ஔவையார்—

தீயாரைக்காண்பதுவுந்தீதேதிருவற்ற
தீயார்சொற்கேட்பதுவுந்தீதே—தீயார்
குணங்களுரைப்பதுவுந்தீதேயவரோ
டிணங்கியிருப்பதுவுந்தீது.

இதனுலன்றே அமரகோசக்காரரும் சூத்திரவர்க்கத்துக் கள்விற்போர் கூத்தாடிகள் உடன்சேர்த்து குசீலர் (பாடகர்) பெயரையுரைத்தனர்.

மேற்கூறிய வேதாகம புராணுதிகளின் அபிப்பிராயப்படி பரமேசுரனைக்குறித்துச் செய்யப்படுகிற வைதீககானம் வியாக்யாகா

னம் லௌகிககானம் மூன்றும் நல்லிசை அல்லது சிவகானம் என்னும் ஈசுரனைக்குறியாது சிங்காரம் கீர்த்தனம் நாடகம் நாத்துதிமுதலிய விஷயமாய்ச்செய்யப்படுகிற கானம் கேவலலௌகிககானம் என்னப்பட்ட துர்க்கானம் என்றும் ஸ்பஷ்டமாகிறது.

சிவகானம்.

'சர்வஸ்யப்ரபுமீசாநம்' 'சிவஏகோத்யேய:' இத்யாதி சுருதிவசனங்களால் பரமேசுரனொருவனே பிர்மா விஷ்ணு ருத்திரர் இந்திரன் அக்கினி சூரியன் தேவர்கள் முதலிய யாவராலும் புகழப்படுபவன். சக்கிரவர்த்தி சந்நிதியில் மற்றையர் புகழ்ச்சியெல்லாம் பிரகாசிக்காமற் போவதுபோல பரமேசுரசந்நிதியில் "ஸர்வமந்யத் பரித்யஜ்ய" என்ற சுருதிக்கிணங்க மற்ற எல்லாத் தேவர்களுடைய புகழ்ச்சியும் அப்பிரகாசமாய்விடும். பரமேசுரனைப் புகழ்ந்துபாடுதலே சகலருக்கும் சகலசித்திகளையுங் கொடுக்கும்வன்மையுடையது. 'இதிகாஸேஷு—யோகஸ்யாத் யோகாதேவசிவைக்யதா' என்ற பிரமாணப்படிக்கு ஈசுரகானத்தில் ஏகாக்கிர சித்தத்தையடைந்தோர் சிவைக்யபலனை யடைவரென்று ஈசுரகானத்தினாலுண்டாகும் உத்தம பலன் விதிக்கப்படுகிறது. வைஷ்ணவாதிமதத்தினர் சாரூபம்வரை யொப்புக்கொள்வதன்றி இரண்டறக்கலத்தலாகிய ஐக்யமுக்தியை யொப்புக்கொள்வதின்று. சாயூஜ்ய பதத்துக்கும் உடன்கூடியிருத்தல் எனப்பொருள்கொள்ளாநிற்பர். கூடியிருத்தல் சமீபத்திலெனில் சாமீப்யமே ஆம். ஆபரணாதிகளைப்போலத் திருமேனியொடுகூடியிருப்பதெனில் பிரிவும் நேரிடும் இரண்டறக் கலத்தலுமாகாது. யுஜ்தாதுவுக்கு இரண்டற ஒன்றுபடல் என்ற பொருளே சால்புடைத்தாம். ஐக்யமுத்தியை உத்தம பலனாகக் கொடுக்கக்கூடிய கானத்துக்குப் பூரண உரிமைத்தன்மையுடையராக விண்டுவாதியரைக்கூறுவது குருவிதலையில்மலையையேற்றமுயல்வதுபோலிருக்கிறது. காயகர் விஷ்ணுமூர்த்திக்கு ஐக்யமுக்தியைக்கொடுக்கும் வன்மை உண்டென்று தமது கக்ஷிக்காகக்கூறினும் அவர் சொல்வது சரிதானென்று விஷ்ணுமூர்த்திக்காதிக்கங்கூறும் நூல்களும் விசிஷ்டாத்வைதிகளாகிய ஸ்ரீவைஷ்ணவரும் த்வைதிகளாகிய மாத்வரும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்களென்

பரு தின்னம். ஆகலின் ஏகசக்ராதிபதியொருவனுக்கே உலகமுழுவதிலும் சம்பூரண உரிமையும் ஏனைதேசாதிபதியாதியர்கட்கு அசம்பூரணஉரிமையும் இருத்தல்போல கானத்தோத்திரத்தில் பரமேசுரனொருவனுக்கே சம்பூரணஉரிமையும், விண்டுமூர்த்தியாதியர்க்கு அசம்பூரண உரிமையும்உண்டென்பது நிர்ப்பாதித சித்தாந்தம். இந்துதேசமுழுவதும் பலமிராசுதார், ஜாகிர்தார், ஜமீன்தார் அரசர்களுக்குக் கண்டமாப்ச் சுதந்தரப்பட்டிருக்கினும் அவரனைவர்க்கு மேலான ஸ்ரீமகாராஜாவாகிய சக்கிரவர்த்தியாருக்கே அகண்டமான பூரண சுதந்திரமாதலால் சக்கிரவர்த்தியாருடையதென்றே கூறப்படும். அதுபோல சம்பூரண உரிமையுயர்வால் சிவகானம் எனக் கானத்துக்குப் பெயரிடுவதிற்றடையின்று.

சிவம் என்றசப்தத்துக்கு வேதம் கடவுள் நன்மை(மங்களம்) முத்தி என்ற பொருள்களிருப்பதால் தனித்தனி இவ்வருத்தங்களைக் கானசப்தத்தோடுகூட்டில் வேதத்தால் விதிக்கப்பட்ட கானம், கடவுள் சம்பந்தமான கானம், நன்மையான (மங்களமான) கானம், முத்தியைத்தரும் கானம் என்று ஆம். இவைகளின் பொருட்களைப் பரியாலோசிக்கில் வேதோக்த உத்தமகானம் சிவபரஞ்சுடருக்கே உரியது. கடவுளர்க்குங் கடவுளாந்தன்மையுமவனுக்கே. முடிவற்ற உயர்வொப்பற்ற நன்மையுடையானும் அவனே சர்வோத்தமமாகிய பரமுத்தியைத்தரும் வன்மையுமவனுக்கே. ஆதலால் சர்வோத்தமமாய பரம்பொருள் சம்பந்தமான கானம் எனக்குறிக்கச் சிவம் என்னும் விசேஷணம் பொருத்தமானதென்பதும் அப்பரம்பொருள் சிவபரஞ்சுடரேயென்பதும் தெளிவு.

இனி சிங்காராதி தோஷயுக்தமான விஷயங்களில் உபயோகிக்கப்படுங்கானம் துர்க்கானம் (குற்சிதகானம்) தெய்வத்தைப்பற்றிச்செய்யப்படும் கானம் நன்மை (மங்களம்) யைத்தரத்தக்க கானம் ஆதலால் நன்மையான கானமே சிவகானம் எனப்பொதுப்படக்கொள்ளினும் பொருந்தும். அதுவும் சர்வ மங்களை சமேதனாகிய சிவபரம்பொருளையேசுட்டும் என்றறிக.

இனி பொதுவாகக் கூறில் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், ஆக்னேயம் என்னப்பட்ட ஆறுமதங்களிலும் மற்ற ஆத்திக சமயங்களிலும் உள்ள பக்தர் யாவரும் அவ்வவர் உபாசனா மூர்த்திகளைக் ஞானத்தோடு பாடித் தோத்திரிக்கச் சுதந்திரமுடையவர் தாமென்றும் அதிலும் பரமேசுரனுக்குக் ஞானத்தோத்திரத்தில் சம்பூரணஉரிமைத்தன்மையுண்மையால் பரமேசுரபக்தர்களுக்குக் ஞானத்தோத்திரத்தில் விசேஷ அதிகாரமும் விஷ்ணுவாதி மற்றைய தெய்வங்களிடத்தில் பக்தியுடையவர்களுக்குச் சாதாரண அதிகாரமும் உண்டென்றும் எல்லா ஆஸ்திகமதத்திலுள்ளவர்களும், சரியைமார்க்கத்தோர் ஞானத்தோத்திரத்தை முக்கியமாயும் கிரியை மார்க்கத்தோர் உபாங்கமாயும் மற்றைய மார்க்கத்தோர் அவசிய சத்கருமமாயும் கொள்ளத்தக்கதென்றும் நிச்சயமாகிறது.

இனி ஞானம் அறுசமயத்தோர்க்கும் ஏனைய ஆத்திகர்க்கும் பொதுவெனில் பரமேசுர பக்தர் சிவஞானம் என்பதுபோல வைஷ்ணவர் வைஷ்ணவஞானம் என்றும் சாக்தர் சக்திஞானம் என்றும் இவ்விதம் அவ்வவர் தெய்வப்பெயர்களை ஞானத்துக்கு விசேஷமாக்கிக்கூறுதல் நற்ஞானப்பொதுமையைக் குறியாதோவெனிற் குறியா. மற்ற தேவர் எல்லா மூர்த்திகளையுந் தனக்குள்ளடக்கியுயர்வெய்தாமையின் சக்கிரவர்த்தியார் அரசாட்சியென்பதில் இந்து தேசமும் இந்து தேசத்துள்ள சுதேச அரசாட்சிகளெல்லாமும் அடங்கும். சுதேச அரசாட்சிகளிலொன்றைச்சுட்டுவதில் இந்து தேசமும் இந்துதேசத்துள்ள சுதேச அரசாட்சிகள் யாவும் அடங்கா அதுபோல.

சிவம் என்ற சப்தம் பரமேசுரனைக்குறிக்கும்பொழுதுமெப்படியெல்லா மூர்த்திகளையும் உள்ளடக்கிக் குறிக்குமெனில் சிவபூஜையென்ற சப்தத்திலேயே பரமேசுரன், வித்தியேசுரராகிய அநந்தர் சூக்குமர் சிவோத்தமர் ஏகநேத்திரர் ஏகருத்திரர் திரிமூர்த்தி ஸ்ரீகண்டர் சிகண்டி, கணேசராகிய நந்தி மகாகாளர் பிருங்கி கணபதி இடபம் கந்தர் பார்வதி சண்டர், லோகபாலராகிய இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயுகுபேரன் ஈசானன் பிருமா விஷ்ணு அவர் ஆயுதங்கள் சூரியன் சந்திரனாதியர் இவர்கள்

பூஜையும் அடங்கும். அதுபோல சிவகானம் என்றால் சகலமூர்த்திகள் கானமும் உள்ளடங்கும். ஆதலால் சிவகானம் என்றால் மகாதேவனையும் விஷ்ணுவாதி மற்றதேவர்களையும் கிரமமாய்த் துதிக்கும் நல்ல கானம் என்றருத்தமாம்.

இனி அவைதிகர்களாகிய ஆருகதர் முதலியவர்களுடன், கிறித்துவர் முகம்மதியர் முதலிய மதத்தினரும் தங்கள் தங்கள் தெய்வங்களைத் தொழுதற்கும் கானம் உபயோகப்படுத்தப் படலால் அவைகட்குக் கதி யென்னவெனில், சிவஞான சித்தியார் "யாதொருதெய்வங்கண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் வந்தருள்புரிவர்" தாயுமானவர் "ஏதுபாவித்திடினு மதுவாகி வந்தருள்செயெந்தை" என்ற உண்மைகளுக்கிணங்கப் பரப்பிர்மமாகிய பரமேசுரனொருவனே எல்லாத் தேவதா ரூபங்களையும் அதிஷ்டித்து நின்று உபாசகர் தகுதிக்கேற்றபடி பலனருள்டவனாதலால் சிவகானம் என்ற பதம் அங்கும்பொருந்தும்,

முடிவுரை கூறுமிடத்து பாரதம் சாந்திபர்வத்தில் "அஸ்ருஜத் ஸர்வசாஸ்த்ராணி மஹாதேவோமஹேச்வர:" முதலிய வாக்கியங்களாலும், பல பிரபலப்பிரமாணங்களாலும் தன்னையறிந்து உபாசித்துப்தற்பொருட்டாக (லோகோபகாரமாய்) பரமேசுரனே பதினெண் வித்தைகளையும் மற்ற சாஸ்திரங்களையும் அருளினார் என்பது தெளிவு. அவ் வித்தைகளிலொன்றாகிய காந்தருவவேதத்துக்கும் சிவபிரானே கருத்தாவாயிருப்பதாலும், அக்காந்தருவ வேதத்தில் கானத்துக்கு ஜீவனாகிய சப்தசுரத்துக்கும் பரமேசுரனையே ஜீவனென்றும் அவனையன்றி யொலி இன்றென்றும் கூறலாலும், வேதாகமங்களும் பரமேசுரனை நாதப்பிர்ம சொரூபமாய் வருணித்தலாலும், நாதம் பரமேசுரனது அருவத்திருமேனிகளிலொன்றாயிருப்பதாலும், நாதத்தைச் சக்தியாகக் கூறுமிடத்தும் சக்தன் பரமேசுரனாவதாலும், இசையை (கானத்தை) பரமேசுரரூபமாகவே கூறப்படலாலும் சகலவித்தைகளுக்கும் ஈசனென்பது சுருதிப்பிரசித்தமாதலாலும் கானத்துக்குத்தமபலனைத்தரும் உத்தமோத்தமப் பொருளாதலாலும் சிவகானம் எனக்கூறல் நிர்ப்பாதித சித்தாந்தமாய தறிக,

ஆதிசங்கரர் சௌந்தரியலகிரியில்

வேதாஞ்சகன்மால்புரந்தரன்வேகசண்டகுபேர ...ணே
டாதியெண்டிசையாலர்பொன்றவுமாதியந்தமிலாததோர்
நாதர்பொன்றிலரேதுன்மங்கலநாணுறுந்திறமாதலா ல்
நீதழைந்ததுயோகமம்பிகைநீலியென்பதுபாவ மே.

என்பதாலும் பரமேசுரனது நித்யமங்களத்வம் வெளியாம்.

மேற்போந்த நியாயங்களால் சிவகானம் உத்தம பலனைத்தரத் தக்கதென்றும் பரமேசுரனொருவனை எல்லா விதத்தாலும் கானத்தில் சம்பூரண உரிமைத்தன்மையுடையானென்றும் விஷ்ணுவாதியர் பரமேசுரனது பரிவாரங்களாதலால் அன்னவர் தோத்திர கானம் கீழ்ப்பட்ட பரிபாகிகளுக்கன்றி உயர்ந்தபரிபாகிகளுக்கு முக்கியமன்றென்றும்பரமேசுரன்சருவகாரணனாதலால் வேரிலூற்றும் நீர், கிளை கொப்பு இலையாதிகளுக்கும் செழிப்பைத்தரல்போல் பரமேசுரகீர்த்தனகானம் சகல தெய்வங்களுக்கும் திருப்தி தருமென்றும் கிளை கொப்பு இலையாதிகளிலூற்றும்நீர் மற்றக்கிளையாதிகளுக்கும் வேருக்கும் செழிப்பைத் தாராததுபோல விண்டுவாதியர் கீர்த்தனகானம் மற்றையருக்குத் திருப்திதராதென்றும் எல்லா ஆத்திக மதத்தினரும் அவ்வவர்தெய்வத்தை அவரவர் தகுதிக்கேற்றபடி கீர்த்தனகானஞ்செய்யு முரிமையுடையராவரென்றும் ஸ்பஷ்டமாகிறது.

இவைகள்யாவும் நன்குணர்ந்தே ஆதிசங்கரபகவத் பாதாசாரியர் தமது சிவாநந்தலகிரியில்

"சஹஸ்ரம்வர்த்தந்தேஜகதிவிபுதா: க்ஷுத்ரபலதா:
நமந்யேஸ்வப்நேவாததநுஸரணம் தத்க்ருதபலம்
ஹரிப்ரம்ஹாதிநாமபிநிகடபாஜாமசுலபம்சிரம்யாசே
சம்போசிவதவபதாம்போஜபஜநம்"

"உலகத்தில் அற்பபலனைக்கொடுக்கின்ற தேவர்கள் அநேகர் இருக்கின்றனர், அவர்களையநுசரித்தலையும் அவர்கள்செய்யும்பிரயோஜநத்தையும் கனவிலும் நான் கருதாமலிருக்கிறேன், ஓ சிவா! சம்போ! உன் சமீபத்தையடைந்த ஹரிப்பிர்மாமுதலியவர்களுக்கும் அரிதான உம்முடைய பாதகமல பஜனையை வெகுகாலமாய்

வேண்டுகிறேன்" என்று தமது சித்தாந்தத்தை வெளியிட்டனர்.

தாயுமானவர்.

"சைவசமயமேசமயம் சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறி புகுதவேண்டாம்"

விண்ணவரிந்திரன்முதலோர்நாரதாதி
விளங்குசப்தரிஷிகள்கனவீணைவல்லோர்
எண்ணரியசித்தர்மநுவாதிவேந்தர்
இருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக்
கண்ணகன்ஞாலம்மதிக்கத்தானேயுள்ளங்
கையினெல்லிக்கனிபோலக்காட்சியாகத்
திண்ணியநல்லறிவாலிச்சமயத்தன்றோ
செப்பரியசித்திமுத்திசேர்ந்தாரென்றும்

(1) அம்பிகை விஷ்ணு இலக்குமி பிர்மா சரச்சுவதி கிருஷ்ணபகவான் அவர் தேவியர் தும்புருநாரதர் கந்திருவர் சித்திரகேது முதலிய அளவிறந்தபலர் சிவகான கீர்த்தனஞ்செய்து அருள்பெற்றிருக்கின்றனர்.

(2) கைலைமலையையெடுத்த அபராதத்தை இராவணன் சாமகானத்திற்காக இரங்கிப் பரமேசுரன் அருள்செய்தனர்.

(3) பரமேசுரன் லோகோபகாரமாகத் தன்னை வணங்குமடியார் பரவசராய்ப்பாடியாடிப் பக்திசெய்யுமார்க்கத்தைக்காட்டும் பொருட்டு பஞ்சகிருத்ய ஆநந்த நடனம், சரசுவதி வீணைவாசிக்க இந்திரன் வேணு கானஞ்செய்ய பிர்மா தாளம்போட சிறப்புற்ற லக்குமி இசையோர்டுபாட விஷ்ணு மிருதங்கம் வாசிக்க தேவர் நின்று சேவிக்கச்செய்தனர்.

பிர்மோத்தரகாண்டம்.

"வாக்தேவீத்ருதவல்லகீசதமகோவேணும்தததப்தமஜ:
ஸ்தாமேனேர்திதாகரோசாமாபகவதிகேயப்ரயோகாஞ்சிதா
விஷ்ணுஸ்ஸாந்த்ரம்ருதங்கவாதநபடுர்தேவாஸ்ஸமந்தாத்ஸ்திதா
ஸேவந்தேதமநுப்ரதோஷஸமயேதேவம்ருடாநீபதிம்"

(4) பக்தாநுக்ரகார்த்தமாய்ச் சிவபிரான் தக்ஷிணாமூர்த்தங் கொண்டெழுந்தருளியிருக்கும்பொழுது தும்புருநாரதர் சுகர்முதலிய ரிஷிசிரேஷ்டர் இசைஞானத்தையும், சாமவேதத்தை வீணையில் வாசித்தலையும் அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க தன்னை இசையோடுபாடி யுய்யுமார்க்கங்களை உபதேசித்தார். அந்த அவசரத்துக்கு வீணா தக்ஷிணாமூர்த்திஎன்று புராணங்களிற் பிரசித்தம்.

(5) திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் யாழிற்றன்னைப்பாடிக்கொண்டிருக்கும்பொழுது பூமி ஈரமாய்விட்டதால் அவருக்கு ஆசனந்தந்து யாழ்கேட்டருளினர் சிவபிரான். (பெரியபுராணம்)

(6) கின்னரேசன் மனைவியர் பரமேசுரனைக்குறித்து வீணாகானஞ்செய்து தோத்திரித்துத் தாங்கள் விரல்களால் வாசித்துக் கானஞ்செய்வதைக்காட்டிலும் தாங்களே வீணைரூபமாகி (வாயிற் பாடுவதுபோல) அவ்வீணையே ஈசுரகானஞ்செய்ய வரந்தரவேண்டுமெனப் பிரார்த்தித்து பரமேசுரனால் வரந்தரப்பெற்றனர். அங்ஙனம் வரம்பெற்று கின்னரஸ்திரிகளே உருத்திரவீணைரூபமாயிருந்து பரமேசுரனைக் கானஞ்செய்கின்றனர். பரமேசுரனாகிய மகாருத்திரன் பெயரால் வீணையிருப்பதுபோல மற்ற மூர்த்திகள் பெயரா லின்று.

(7) பாணபத்திரர் இனிய இசையோடு வீணாகானஞ்செய்த தற்காகத் தானே வெகுகாலந் திரவியங்கொடுத்துவந்து ஒருகால் அவர் தன்னை இசையோடுபாடிப் பக்திசெய்தலி னருமையை வெளிப்படுத்தும்பொருட்டு கயிலையங்கிரிக்குத் தூலசரீரத்தோடு சென்ற சேரமான்பெருமாணாயனாருக்கு நிதிதரும்படி 'மதிமலிபுரிசை —மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பதுவே" என்று பரமேசுரனே திருமுகங் கட்டளையிட்டருளினர். (திருவிளையாடற்புராணம்)

(8) ஈசுரன் தனது பக்தராகிய பாணபத்திரரோடு வாதாட்வந்த சிவபக்தனல்லாத ஏமநாதனைப் பாணபத்திரரது அடிமையென்று விறகெடுத்துச்சென்று இசைபாடி வென்றனர். பாணபத்திரரது மனைவியோடு எதிர்த்துவந்த பக்தியில்லாத பாடினியைப்

வென்றருளினர். இதனால் பரமேசுரன் பக்தியோடு இசைபயில்வாருக்கருளிய தன்மைகள் வெளிப்பட்டன.

(9) சுப்பிரமணியாவதாரமாகிய சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கோலக்காவில் பதிகம்பாடிக் கரதாளமிட்டுப் பண்ணோடு பாடுதலைக்கண்டு கருணைகூர்ந்து பரமேசுரன் பொற்றாளமருளினர். அம்மை பொற்றாளத்துக்கு ஓசையருளினர். திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பண்ணோடுகூடிய பதிகங்களை யாழில்வாசித்துப் பிரசித்திபெற்றவர் திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார். அவர் யாழ் வன்மைக்கு அவர் சுற்றத்தார்கொண்ட அகந்தை நீங்க "மாதர்மடப்பிடி" என்ற யாழ்முறிப் பதிகம் பாடியருளினர். சுவாமிகளுக்கு முத்தமிழ்விரகர் என்று பெயர். சுவாமிகள் அடியார் திருக்கூட்டத்தாராகிய ௯௲ பெயர் ஒன்றுகூடி நித்தலுஞ் சிவகானஞ்செய்து பரஞ்சோதியில் ஐக்கியமெய்தினர். இராகதாளத்துடன் ௯௲ பக்தர்கள் சிவகானம் (சிவபஜனை) செய்ததைக்காட்டிலும் வேறு ஆதார சரித்திரமும் ஒன்று வேண்டுமா? சுந்தரமூர்த்திசுவாமிகளும் திருநாவுக்கசுசுவாமிகளும் பண்ணோடு சிவகானஞ்செய்தனர். அவர்களோடு சிவகானஞ்செய்தவர்கள் ஆயிரக்கணக்கான சிவபக்தர்கள் என்பதை புராணங்களாலறிந்துதெளிக.

(10) ஆனாயநாயனார் மிருகபக்ஷியாதிகளும் கானமிருதமயமாகித் தங்கள் செயன்மறந்து அசைவற்று ஏகாக்கிர சித்தத்தை யடையும்படி பஞ்சாக்ஷரத்தையே வேணுகானஞ்செய்து முத்தி பெற்றனர்.

(11) சித்தர் திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா, சேந்தனார் திருவிசைப்பா, கருவூர்த்தேவர் திருவிசைப்பா, பூந்துருத்திநம்பி காடநம்பிதிருவிசைப்பா, கண்டராதித்தர் திருவிசைப்பா, வேணாட்டடிகள் திருவிசைப்பா, திருவாலியமுதனார் திருவிசைப்பா, புருடோத்தமநம்பி திருவிசைப்பா, சேதிராயர் திருவிசைப்பா, என ஒன்பதின்மர் கானரூபமான தோத்திரமாகிய திருவிசைப்பாக்கள், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புராணமென்றவரிசையில் தேவாரத்தோடெண்ணப்பட்டு யாவராலும்

பாராயணஞ்செய்யப்பட்டுவருகின்றன. அன்னவர் மகாசித்தி முத்தியார்ந்தவர். அவர் சரித்திரம் ஸ்தலபுராணங்களில் விளங்கும்.

இவ்விதம் பூர்வத்தில் பண்ணோடு பரமேசுரனைப் பாடிப்பஜனைசெய்து முத்திபெற்ற அடியார்களையும் அன்னவர் விஷயத்தில் ஈசுரன்செய்த கருணாலீலைகளையும் ஒவ்வொன்றாய்க் கூறப்புகில் மிகப்பெருகும்.

தேவாரம் சதஷ வருடங்களுக்குமுந்தியது திருவாசகம் அதற்கு முந்தியது. திருவிசைப்பாக்களும் புராதீனமே.

(12) பிந்தியகாலங்களில் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முந்தியே "மாணிக்கவாசகர் பேறெனக்குத்தரவல்லாயோயறியேன்" என்று பல்லவியெடுத்துப்பாடிச் சிதம்பரசபையிற் ஜோதிரூபமாய்க் கலந்த முக்தராகிய முத்துத்தாண்டவர் அவர் மாணாக்கராகிய மாரிமுத்தாப்பிள்ளை முதலிய மகத்துக்களுடைய கானரூபமான கீர்த்தனங்களும் பதங்களும் பல இருக்கின்றன. அவை தாளராக சாமர்த்தியத் தோடும் பொருட்சுவையோடும் கூடியன.

(13) சைவமடாதினங்களில் தொன்றுதொட்டு மடாதிபதிகள் சிவபூஜாகாலங்களிலும் சிவதரிசனத்துக்குப்போகுங்காலங்களிலும் வெளிப்புறப்படுங்காலங்களிலும் குருபூஜாகாலங்களிலும் தேவாரத்தைப் பண்ணோடு கைத்தாளசகிதம் படித்துப்பஜனைசெய்துவருகிறார்கள்.

(14) சிவாலயங்களில் கெர்ப்பக்கிரகத்தில் சிவத்துவிஜரும், அர்த்த மண்டபத்தில் வேதாத்தியயனஞ்செய்யும் பிராமணரும், கலாமண்டபத்தில் பிர்மசுரகாக்கள் ஆகிய வேதகானஞ்செய்பவரும், அதற்குவெளியில் அந்தராளமண்டபத்தில் தீக்ஷிதாள் தபசிகள் எதிகளும், நிர்த்தமண்டபத்தில் க்ஷத்திரிய ஸ்திரீபுமான்களும், ஆறுகால் மண்டபத்தில கானம்பண்ணுகிறவன் நட்டுவன் மத்தளக்காரன் கணிகையருமிருந்து பூஜாகாலங்களில் வேதகானம்லௌகீககானம் நிர்த்தனம ஈசுரப்பிரீதியாகச் செய்யவேண்டுமென்று சிவாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. சிவகானம்செய்வோர் தத்தம் வருணத்துக்குரிய மண்டபங்களிலிருந்து பூர்வவிதி நியமம்,

உலகத்துள்ள சிவாலயங்களிலெல்லாம் அங்ஙனமே நடந்து வருகின்றன. இவை உலகம் உண்டாய்த்தேவோபாசனை யேற்பட்டகாலமுதல் நடந்துவருவன. நவீனமா யேற்பட்டனவன்று. ஆகமத்தில் பூஜாகாலத்தில் "த்ராவிடகாநைச்சஸ்தோத்ரபாடைச்சதோஷயேத்" 'திராவிடகானம் ஸ்தோத்திரபாடம் பாடுதல் செய்யத்தக்கது" என்றுகூறப்பட்டிருக்கிறது. ஆதலால் தமிழ்ப்பாஷையிலும் இசைநூல்களும் இசையோடு பாடும் பாட்டுகளும் அநாதியாயுண்டென்பது தெளிவு. சோடச உபசாரகிரமத்தில் கீதவாத்தியங்களைப் பதினைன்காவதாகவும் நிருத்தனுதிகளைப் பதினைந்காவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பூர்வகாலந்தொடங்கி சமஸ்கிருததிராவிட (தமிழ்) பாஷைகளில் கானஞ்செய்யத்தக்கதோத்திர இசைப்பாட்டுகள் இருந்திராவிடில் மேற்கூறியவிதிகள் ஏற்படுமா? அங்ஙனம் நடந்துவருமா? உலகத்துள்ளசிவாலயங்களும் அவைகளுக்காதாரமாகிய சிவாகமங்களும் சிவாகமோக்த பரார்த்தபூஜையில் சோடசோபசாரங்களும் அவ்வுபசாரங்களிற் கானத்தோடு சிவபிரானைப்பாடலும் இன்று நேற்றுண்டானவைகளா? ஆன்மார்த்த சிவபூஜை செய்பவருக்கும் சோடசோபசாரமுண்டு. பூஜை செய்பவர் விசேஷ கானப்பயிற்சியுடையராகில் லௌகீககானத்தையும், அங்ஙனமின்றேல்வைதீககானம், வியாக்யாகானங்களையும் செய்வர். ஆதலால் சிவலிங்கார்ச்சனைசெய்பவர் ஒருவரும் கானத்தோத்திரமின்றிச்செய்தல் கூடாமையென்றறிக. தொன்றுதொட்டு ஆன்மார்த்த சிவபூஜையும் நடந்துவருவதால் கானத்தோத்திரமும் நடந்துவருகின்றதென்று கூறுவதிற்றடையுளதோ? உலகம் உண்டானகாலமுதல் அவ்வக்காலங்களில் சிவலிங்கார்ச்சனை செய்துவந்தவர்களைக்கணிக்க்ப்புகில் அளவிலடங்குமா?

இனி காயகர் தன்மூர்த்திகளையன்றி ஏதாவதொரு மூர்த்தியினிடத்தில் பக்திவைத்து அத்தேவபூஜையையுஞ் செய்துவருபவராஞல் அவர் பூஜாக்கிரமங்களைப் படித்தறியாவிட்டாலும் அநுபவத்திலாவது அறிந்திருப்பார். அவ்வநுட்டானத்தையுந்தாம் வைத்துக்கொள்ளாமையினுலன்றோ "சிவனைக் கானத்தோடு தோத்

திரித்தல் பூர்வத்திலில்லை இருபது வருஷகாலமாய்த்தான் சிலர்செய்துவருகின்றனர்" என்று வாய்கூசாமற்சொல்லிவிட்டனர். அந்தோ இவருக்குப் பாடமாயிருக்கும் தீக்ஷிதர்செய்த பரமேசுரவிஷபமான கீர்த்தனங்களை நினைத்தாவது வருஷத்தைக்கொஞ்சங்கூட்ட இவருக்கு மனமில்லாமற் போயிற்றுப்போலும் "தீக்ஷிதர் என்னமோசெய்துவிட்டனர்" என்று அவருக்கறியாமை யேற்றுகின்றனர். அங்ஙனங்கூறுவதால் 70 வருடம் 20 வருடமாய்ச் சுருங்காது.

காயகர் "தாளபாகத்தார்தான் கீர்த்தனகானம் விஷ்ணு விஷயமாயேற்படுத்தினர். அவர்தான் கானத்தோடுசெய்யும் விஷ்ணுபஜனைக்கு மூலபுருஷர்" என்கின்றனராம். அந்தோ இவர் இதம் சொல்பவரைப்போல் ஆரம்பித்துத் தாளபாகத்தார் காலத்துக்கு முன் விஷ்ணுவுக்கும் கானத்தோடு தோத்திரமின்றென்று மண் போடப்பார்க்கிறார். இவர் அறிந்தமட்டாயினும் அதற்குமுன் விஷ்ணுவிஷயமாய்க் கானகீர்த்தனம் இன்றென்று நாமொப்புக் கொள்ளமாட்டோம்.

தாளபாகத்தார் விஷ்ணுபக்தர். கீர்த்தனகானஞ்செய்து பக்திபுரிந்தனர். தமக்கு விஷ்ணுவினிடத்திலிருந்த அன்பின் மிகுதியால் அநேககாயகங்ஙனஞ்செய்யும்படி போதித்தனர். அவர்காலமெல்லாம் 300வருஷங்களுக்கு மேற்போகாது. அதிகமிருந்தாலுமிருக்கட்டும். அவர் விண்டுவைக் கீர்த்தனகானஞ்செய்ததே சிவபிரானைக் கானகீர்த்தனஞ்செய்யக்கூடாதென்பதற்கு அத்தாக்ஷியாமா? அவருக்குமுன்னரும் பின்னரும் உலகிற் றேவோர்பாசனையேற்பட்டகாலமுதல் சிவாலயத்தில் சிவகானம் நடந்துவருவதோடு அளவற்ற பக்தரும்புரிந்து முத்திபெற்றிருக்கின்றனர். சிவகான கீர்த்தனங்களைச்செய்த பக்தர்களை யளவிடமுடியுமா? இப்பொழுது செய்துகொண்டிருக்கிறவர்களைக் கணக்கிடமுடியுமா? உலகத்துள்ள சிவபக்தர்களில் ஆயிரத்தில் ஒருவர்தான் யோகஞானமார்க்கத்திற் செல்லத்தக்கவராவர். மற்ற 999 பெயரும் சரியை கிரியையிற்றானிருப்பர். அவர்கள் சிவகானஞ்செய்யவேண்டியது

வசியம். அதில் 9000பெயர் சரியையாளராயிருப்பர். அவர்களுக்குச் சிவகானத்தைவிடஉய்யும் முக்கிய மார்க்கம் வேறில்லே. அவர்களில் பெரும் பாகத்தார் சிவஸ்தோத்திரகானஞ்செய்யநேரிடும். உலகம் உண்டானகாலமுதல் இவ்விதியேற்பட்டு அநுபவத்தும் நிகழ்ந்துவந்திருக்கச் சிவஸ்தோத்திர கானஞ்செய்வது நூதனவழக்கமென்றுகூறிய காபகாது நுணணறிவை மெச்சிப்புகழாதவருமுளரோ? ஆச்சரியம்! ஆச்சரியம்!!

(15) சிவாகமங்களிலும், சிவாகமசாரமாகிய அகோரசிவாச்சாரியர் பத்ததியிலும் 'சிவகானவித்' 'சிவசானவித்து' என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனுல் சிவகானஞ்செய்வோர் அநாதிகாலந் தொடங்கியுண்டென்பது ஸ்பஷ்டமும் பிரமாணஸித்தமுமாம்.

(16) சிவரகசியத்தில் நைமிசாரணியவாசிகளாகிய "முப்புரிநூலர்குண்டிகைக்கரத்தர்மோனமுத்திரையாஞ்செழுத்தே, வைப்பெனுமனத்தர்பூதிகண்டிகையும்வபங்கியநயங்கொளும்வடிவர்"

ஆகிய "அத்திரி மரீசி யங்கிரா வசிட்டன் தவசிகளுக்கினவற கி, பத்திசேர்வாமதேவன் குச்சரன்விபாண்டகன்பாராசரன் கபில ன், சித்திபெற்றிடு மார்க்கண்டன்பாற்கவன் றதீசியேகாசிபன்பிரு கு, புத்திசேர்வை சமபாயனன் சுசீலனபுலத்தியனகத்தியன் பூதன்"

"கங்கைவேணியனேர்பயில்வனமிருகசிருங்கனங்கார்த்திபாயனன் சீர், பிங்கிருடிப்பேர்முனிவன்வான்மீகன்பெருமைசேராதித்தவன் மன், றுங்கணுகங்கன் கிஞ்சுகப்பிரியன்றுந்து பிசிலாதரன்சுமுகன், சங்கரான்றருமன்சத்தி சாண்டில்யனுயுட்டுமோன்சதாநந்தன்'

முதலிய நாற்பத்தெண்ணுயிர ருஷிகளினுடைய பக்தியோக ஞான விசேடங்களைக் கூறுமிடத்து

பத்திப்பொலிவோடுபூசையிற்பதுமாசனத்திருப்பார்
முத்திக்கிசைதருமாகமமூவொன்பதொன்றுரைக்குஞ்
சுத்திக்கியல்விதிபாலேந்துசுத்தித்திரம்புரிவார்
சத்திக்கிறைசிவலிங்கவர்ச்சனைமந்திரந்தெரிவார்.

காத்தாம்புகழ்தருநித்தியநைமித்தியபூசை
பூத்தாமகத்துள்ளுஞ்செய்துபுறத்துஞ்செய்துபணிந்தே
காத்தாடிமுன்னின்றுடிக்கண்ணீராடிக்கைகொட்டிக்
கூத்தாடுவரேத்தாடுவர்குழைந்தாடுவர்விழைந்தே.

என அவ்விருஷிகணங்கள் சிவபூஜைசெய்து சிவகானதோத்திரம் பாடி ஆநந்தநடனம் புரியுந்தன்மைகூறப்பட்டது. இவ்வணம் சிவகானஞ்செய்துய்தியெய்தியவர் சரித்திரங்களை விரிக்கில் மிகவிரியுமாதலால் சில பிரமாணங்களை யீண்டெடுத்துக்கூறுவாம்.

ஈசுரன் கானசொரூபன் என்பதற்கு "ஏழிசையாயிசைப்பயனாய்" ஏழிசை யேழ் நரம்பினோசையை, ஏழுலகாளியை" முதலிய திராவிடச்சுருதிகளும்

சிவரகசியம். விஷ்ணு வந்தனைச்சருக்கம்.

மனமகிழ்ந்தானந்தநடம்புரிகின்றார்வணங்குகின்றார்மந்திரங்க ள்
கனைதைபெறவெண்ணுகின்றார் சிவநாமகானங்கண் முழக்குகின்று
றுனுமிவையெலாங்காணக்கேட்கநாம்பாக்கியங்களுற்றேமென்றே
சனகன்முதன்முனிவோர்கள் கமலையுங்கேட்டிடமாயன்சாற்றிச்
சார்ந்தான். (23)

பங்கயமங்கையுருத்திரவீணைபயிலுறுமேழிசையாற்பகர்கின்று ன்
மங்களமேவுறுகந்திருவத்தோர்மனைவியரோடுமுழக்கினர்கானம். (26)

மன்னவன்மனைவியர்சமுகந்தனிலேமலர்மகள்வீணையின்வரிசையிலாளு
ர, பன்னருநாமம்பாடினள்கேட்டார்பாற்கடல்வந்தருள்பாக்கியவதிநீ. (38

விஷ்ணுமூர்த்திவசனம்.

மன்னவயானுமிலிங்கார்ச்சனையால்வைகுண்டதொடுசக்கரமுற்றே ன்
றுன்னருசாலுரன்முரன்முதலாகுஞ்சுரர்பகையாதிசிசார்பகைகொன்றே
பன்னருலோகபயந்தணிவித்தேபாக்கியமுநறனனமேவினனன்றே (ன்
புன்னருசிவநாமதநமுதுண்போரொப்பறுசித்திகள்பெற்றுறுவாரே. (35)

சித்திரகேதுராஜா.

பரசநித்தகமண்டபர்திறபாமாமுன்றுனைப்போதும்பயிலுகின்ற
முரசமுழவகொண்டான்சிவநாமகீர்த்தனைத்தான்முழக்குகின்றான் (24)

### விசுவாசி பூஜைச்சருக்கம்.

அந்தமன்னனுவந்தமாதர்கேட்டந்தமற்றவாறந்தமேவினு ர்
வந்தகத்திருவத்தர்யாழ்வலோர்மாகமுற்றுனோர்மோகமுற்றனே ர்
சந்தவேழிசைக்கானவீணையிற்சங்கராசிவசம்புவேயெ னு
முந்துமெக்கையர்நாமவோசையேமூரியண்டமெங்கணுநிறைந்ததே (3)

பத்திபெற்றனான்குயின்முழக்கமும்பாகுதேனுடன்பால்கலந்த து
மொதிருக்கவேருத்ரவீணையினுமைமணாளனன்றுமமோதுவா ன்
சித்திரத்தினிற்பதுமைபோலநந்திருவனுரெலாந்திருவின்பாடலா ன்
முத்திசித்திபோலுண்டிவேண்டிலார்மோகமுற்றவண்மேவினார்களே (5)

### உருத்திரவீணை வரலாற்றுச் சருக்கம்.

இன்னாசராஜன் மனைவிகள் சிவபிரானை வீணாகானத்தா லுபாசித்து:-

"நகங்களாற்றெறிப்பதின்றிநலம்பெறுமோசைநல்கு ஞ்
சகமபுகழ்வீணையாயாமுறுவரந்தருவாயென் று
ருகந்தவர்தமக்கேயவ்வாறுதவினமுமையேயன் ன
விகந்திடாவணையர்வீணையாயினரீதுகேளாய். (28)

"துன்றியவிசைகள்பாடிச்சோதியார்மகிழச்செய்தார்" (29)

### தேவி காட்டியம்பார்த்த சருக்கம்.

"இனிதாடிப்பாடினாரனுமங்கள்" (4)

(அம்பிகை.)

"கங்கைநாதர் நாமங்கண் மதுர கீதத்தோடு நாவினானவில் கின்றான்" (5)

"இலங்குமாதர்களுருத்திரவீணையினெக்கைபார்புகழேத்து நலங்கடன்செவிப்புக"

### இலிங்கபுராணம்.

என்றுரைசெய்துகண்ணனுந்தேவிமாரொடுமிளமதிக்கண் ணி (தார்
கொன்றையோடணிதருளிர்சடைக்குழகன் குரைகழல்பாடிநன்குறைச்
நின்றநபமிறைவன்றனைந்தொழுதேத்திப்பாடுவோரிம்வியோட்டறிவிண்
ணின்றுயர்கயிலைமால்வரைதன்னினிலவிவீற்றிருப்பமெந்நாளு ம்

தமிழ்வேதம் — திருஞானசம்மந்தமூர்த்தி சுவாமிகள்.

"கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப், பாதத்தைதொழநின்ற பரஞ்சோதி" "பண்ணொன்ற இசைபாடுமடியார்கள் குடியாக, மண்ணின்றி விண்கொடுக்குமணிகண்டன்"

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

"பாடநின்றுடுமாறுவல்லராயவரேயழகியரே"
"நாளுமின்னிசையாற்றமிழ்பரப் பு"
"பாட்டுப்பாடிப்பரவித்திரிவா ர்
ஈட்டும்வினைகள்தீர்ப்பான்கோவி ல்."

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்.

"வேதகீதன்"
"கீதத்தை மிகப்பாடும் அடியார்க்கென்றும்
கேடிலாவானுலகங்கொடுத்தநாளோ."

"தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்
திருமலர்மேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடி
நான்முகனுமிந்திரனுமாலும்போற்றக்
காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேற்றாய்
கழுக்குன்றத்துச்சிபாய்கடவுளேநின்
பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே."

தென்சொல்விஞ்சமர்வடசொற்றிசைமொழியெழினரம்பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருணீக்கத்தொழுதெழுதொல்புகலூ ரி
லஞ்சனம்பிதிர்ந்தனையவலைகடல்கடையவன்றெழுந் த
வஞ்சநஞ்சணிகண்டர்வர்த்தமானீச்சரத்தா ரே.

(சரியை)

"நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா
நித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப்

"புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்
தலையாரக்கும்பிட்டுக்கூத்துமாடி
சங்கராசயபோற்றிபோற்றியென்று
மலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதியென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே."

திருவாசகம்

"ஆடுகின்றிலைகூத்துடையான்கழற்கன்பிலையென்புருகிப்-
பாடுகின்றிலை"

இன்னும் கீர்வாணத்து வேதம், உபநிஷத்து, புராணம், இதிகாசங்களில் பலவிடங்களில் பரமேசுரன் கானத்துக்குரியவன் எனக்குறிக்கும் நாமங்கள் பலபடிக்கப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு— சாமசுஜ்யேஷ்டசாமா, ஸாமவேதப்பிரிய:, ஸாமப்பிரிய:, ஸாமகேய:, ஸாமகப்பிரிய:, ஸாமலிங்கம், ஸாமேக்ஷண:, ஸாமமய:, ஸாமகாநவிநோதக:, ஸாமகானப்பிரிய:, ஸாமகானரத:, ஸாமகாநஸமாராத்ய:, ஸாமவேத்ய:, கீதபாத:, கீதப்பிரிய:, கீதாகமமூலதேசிக:, கந்தர்வகாநஸுப்ரீத:, கந்தர்வகிந்நரசுகீத குணாதிக:, காநலோலுப:, கீயமாநுகுண:, கேய:, முதலியன்பல.

இவை ஸ்ரீசாம்பசதாசிவாயுதநாமாவளியிலும் படிக்கப்பட்டிருக்கின்றன.

இத்யாதி பலபிரபலப்பிரமாணங்களால் பரமேசுரனைப்பாடித்துதிக்கும் சிவகானம் அநாதியாயுள்ளதென்றும், அங்ஙனம் செய்யப்படும் கானம் பரமேசுரனுக்கு விசேஷபிரியத்தைத்தரத்தக்கதென்றும், சிவகானஞ்செய்வோர் தங்கள் அபீஷ்டப்படி இகபரசுகங்களையும், சகலமங்களசித்திகளையும், ஐக்கியமுத்தியையும் அடைவாரென்றும், சிவகானம் வேதாகமபுராணாதிகளால் விதிக்கப்பட்டு சகல தேவர்களாலும் ருஷிகளாலும் அநுட்டிக்கப்பட்ட சத்கருமமென்றும் சரியை கிரியை மார்க்கங்களிலிருக்கிற கிரகஸ்தர் (இல்லறத்தார்) அவசியம் சிவகானம் (இசையோடுகூடிய சிவதோத்திரம்) செய்யவேண்டுமென்றும், துறவிகளும் அநுசரிக்கத்

தக்க ஸத்கருமமாமென்றும், சாத்திரப்படி தொன்றுதொட்டனு ட்டிக்கப்பட்டுவருகிறதென்றும் சிவகானத்துக்கென்று ஆலயங்க ளில் மண்டபங்களும் நிர்மாணஞ்செய்யப்பட்டிருக்கின்றனவென் றும், சிவாலயத்தில் தினம் நடக்கிற சோடசோபசாரங்களில் ஒன்று வைதிககான சம்மந்தமும் இரண்டு கானசம்பந்தமுமா மென்றும், ஸ்ரீசமயாசாரியமூர்த்திகள் ஆயிரக்கணக்கான சிவனடி யார்களோடு சிவகான தோத்திரம் [சிவபஜனை] செய்து முக்திப டையுமார்க்கத்தைக் காட்டினரெனவும், இகசுகங்கள் சம்பத்துக் கள் யாவையும்விட்டுச் சாதித்தற்கரிய அருந்தவசுகளைப் புரிந்து பெறத்தக்க முத்தியைச் சகலசம்பத்துக்களோடு குடும்பிகளாயி ருந்துகொண்டே பரமேசுரபக்திசெய்துபெறுதற்கு அதிசுலபமும் சுகமுமான மார்க்கம் சிவகானந்தான் என்றும், சித்தாந்தப்படுகி றது.

இவ்வுண்மைகளை வெளிப்படுத்தும்பொருட்டன்றோ எவ்வ ருணத்து எக்காலத்து யார் சிவகானஞ்செய்யினும் அவர் பரமேசு ரனருளுக்குப் பாத்திரராகி யாவராலும் வணங்கப்படத்தக்கவரா வர் என்பதைக்குறிக்க ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண் டத்தொகையில் "பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்" என் று திருவாய்மலர்ந்தருளினர்.

சரியை மார்க்கத்தவர்க்குரிய, சிவாலயத்தில் திருவலகிடல் திருமெழுக்கிடல் மலர்தொடுத்தீய்தல் திருவிளக்கிடல் ஆகிய சிவ கைங்கிரியங்களுக்குப்பலன்களைக் குறித்து கானரூபமாகப்பாடும் சிவகைங்கிரியத்துக்குப் பலன் அளவில்லையென்று நூல்கள் கூறு வதால் சரியையாளர்க்குச் சிவகான தோத்திரம் முக்கியமென்றும் விசேஷபலனைத் தரத்தக்கதென்றும் கூறப்பட்டது.

இதனை

"விளக்கினார்பெற்றவின்பமெழுகினாற்பதிற்றியாகுந்
துளக்கின்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ந்நெறிஞானமாகு
மளப்பிலைகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தமிழ்வேதத்து வற்புறுத்தின துணர்க.

இனி இயலிற் சந்தப்பிழை சொல்லாக்கமுதலிய குற்றங்களிருந்தால் கேட்டவருக்குந் தோஷங்களுண்டாம், இசைபாடுவதில் இராகதாளமுதலிய குற்றங்கள்நேரிட்டாலும் நிர்த்தனத்தில் பாவாதிகுற்றங்கள் நேரிட்டாலும் பாடுபவர் செய்பவர் கேட்பவர் பார்ப்பவர் என்ற நாற்றிறத்தினர்க்குந் தோஷங்களுண்டென்று பலநூல்கள் கூறுகின்றன இவைகளெல்லாம் ஈசுரவிஷயமல்லாத நரஸ்துதி சிங்காரம் நிருத்தனம் நாடகம் பாடுபவர் செய்பவர் கேட்பவர் பார்ப்பவர்களுக்கேயாம். பரமேசுரவிஷயமாய்ப்பக்தியோடு செய்பவருக்கன்று. இலக்கண இலக்கியவாராய்ச்சியில்லாதவராயும் கானநூல் பரதநூல்களைக்கல்லாதவராயும் அறிவின்றெளிவில்லாதவராயும் இருந்தபோதிலும் பரமேசுரனிடத்தில் பக்தியுடையராய் உள்ளங்களிப்படையக்கரதாளமிட்டு ஈசுரதோத்திரகானத்தைத் தெரிந்தவளவுபாடிக்கொண்டு ஆடினும் அவர்க்கீசனருளுவன். அவ்வண்ணம் நான்குதினஞ்செய்பவர் காந்தருவலோகத்தையடைந்து சுகவாழ்வையடைவார்கள். ஔஷதங்களோடுகூடிய விஷமும் தனது தீங்கையும்விட்டு விசேஷபலனைத் தருவதுபோலும், பிர்மஹத்திசெய்தசண்டிகேசுரர் சிவபக்தியாற்செய்தமையின் ஹத்திதோஷம்நீங்கி விசேஷபலனாகிய சிவசாமீப்யத்தை பெற்றதுபோலும் இராகதாளாதி தோஷங்களோடு சிவகீர்த்தனகானம் (சிவபஜனை)செய்யினும் அவர்கள் சர்வாபீஷ்டங்களையும் முத்தியையுமடைவர். அங்ஙனமின்றிப் பாட்டுக்குற்றம் உடற்குற்றங்களின்றி யாவருமதிசயிக்கும்படி கந்தருவனைப்போலப்பாடும் வன்மையுடையவனாயிருக்கினும் ஈசுரவிஷயமன்றிச் சிங்காராதிவிஷயங்களிற் கானத்தையுபயோகித்துப்பாடுபவன் உபபாதகத்துக்குள்ளாவன். அவனே குணசீலன் காயகன் எனப்படுபவன். அவனுக்குப்பலன் நரகந்தான்.

ஆதலாற் "பாடவறிந்தாற் பரமனைப்பாடு" என்ற பழமொழிக்கிணங்கப்பாடும் தெய்வவிஷயகானம் நற்கானம் (நல்லிசை) சிங்காராதி விஷயகானம் துர்க்கானம் எனும் உண்மையை விளக்கும்பொருட்டு "பண்ணின்பயனே நல்லிசை" என்றார் பெரியோர். இங்

யாபங்களால் கானத்தோடு பாடத்தெரிந்தால் தேவாதி தேவனு கிய பரமேசுரனையே கானஞ்செய்யவேண்டுமென்பது ஐயந்திரிப ற்ற சித்தாந்தம். இவைகளை

சிவதருமோத்தரம்

காமரங்கற்றுரலல்லர்பரதமுங்களிப்புட்கூரத்
தாமரன்முன்னேநின்றுதட்டமுமிட்டுக்கையாற்
பாமரபறியானேனும்பாட்டொருநான்குபாடி
லேய்முமிசையவாழ்வர்காந்தருவத்தையேய்ந்தே.

சிவஞானசித்தியார்

அரனடிக்கன்பர்செய்யும்பாவமுமறமதாகும்
பரனடிக்கன்பிலாதார்புண்ணியம்பாவமாகும்
வரமுடைத்தக்கன்செய்தமாவேள்விதிமைபாகி
நரரினிற்பாலன்செய்தபாதகநன்மையாய்ந்தே.

பெரியபுராணம்.

பண்ணின்பயனுநல்லிசையும்பாலின்பயனுமின்சுவையுங்
கண்ணின்பயனும்பெருகொளியுங்கருத்தின்பயனுமெழுத்தஞ்சும்
விண்ணின்பயனும்பொழிமழையும்வேதப்பயனும்சைவமும்போல்

என்பனவாதி அருள்வாக்குகளாற்கண்டு தெளிக.

இனி எவ்வித சப்தமும் ஒரு சுருதியிலேயே பொருந்தும். ஏழு சுரங்களாலேயேஅளக்கப்படும். கானந்தெரியாதவன் ஏதா வதொருபாட்டைப்பாடில் அதுவும் ஒரு இசையோடுகூடியேயி ருக்கும். வேதம் உதாத்த அநுதாத்தாதி சுரங்களோடு படிக்கப் படுகிறது. கீர்வாணசுலோகங்களும் ஏதாவது ஒரு இசையோடு அல்லது இராகத்தோடுதான் படிக்கப்படுகின்றன.

தமிழ்ப்பாஷையில் எவ்விதத்தோத்திரம்பண்ணினாலும் ஒரு பாவினம்பற்றியே தோத்திரிக்கப்படும். அப்பா; வெண்பா அகவற் பா கலிப்பா ஆசிரியப்பா முதலியவைகளிலொன்றாயிருக்குமேய ன்றி யொருபாவினத்துஞ்சேராமல் ஒருபாட்டுமிராது. அப்படி யிருக்கில் வெண்பா இராகம்சங்கராபரணம், அகவலிராகம் தோடி,

கலி இராகம் பந்துவராளி, கலித்துறை இராகம் பைரவி, தாழிசை இராகம் தோடி, விருத்த இராகம் கலியாணி காம்போதி முதலியன, உலா இராகம் சௌராஷ்டிரம், பிள்ளைக்கவி இராகம் கேதாரகௌளம், பரணி இராகம் கண்டாரவம், இங்ஙனம் ஒவ்வொரு பாட்டும் இன்னின்ன இராகத்திற் பாடத்தக்கதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்தப் பாக்களின் அமைப்பும் போக்கும் ஓசையும் அவைகளைப்படிக்கவேண்டிய இசைக்கிரமுமே அந்தந்த இராகக்களைகளைக்காட்டும். இசையோடுபாடப்படுவதேபாட்டு. எந்தப்பாட்டையும் ஒரு இசையுமின்றிப் பாடவே முடியாது. இதனால் எவ்விதப்பாக்களால் ஈரனைத் தோத்திரிக்கினும் கானத்தோத்திரமாமன்றி வெறுந்தோத்திரமாகவே மாட்டாது. இதனாலேயே உதாத்தாதிசுரத்தோடுள்ள வேதத்தை வைதீககானம் என்றும் கத்யபத்யரூபமாயும் கவிரூபமாயும் உள்ளவற்றை வியாக்யாகானமென்றும் நூல்கள் கூறுகின்றன.

ஆதலால் நாயன்மார்களாகிய காரைக்காலம்மையார் ஐயடிகள் காடவர் கோனுயனார் சேரமான்பெருமாணுயனார், சங்கப்புலவர்களாகிய நக்கீரதேவர் கல்லாடனார் கபிலதேவர் பாணதேவர் மகத்துக்களாகிய இனம் பெருமானடிகள் அதிராவடிகள் பட்டணத்துப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிகள் திருவாய்மலர்ந்தருளிய பதினோராந்திருமுறைப் பிரபந்த அற்புதத்தோத்திரப்பாக்களும் வியாக்யாகானமாகிய சிவகானமேயாம்.

இனி மேற்கூறிய நால்வரோடு மாமூலனார் சீத்தலைச்சாத்தனார் மருத்துவன் முமோதரனார் நாகன்றேவனார் அரிசிற்கிழார் பொன்முடியார் கோதமனார் நத்தத்தனார் சிறுகருந்தும்பியார் நல்லந்துவனார் கீரந்தையார் சிறுமேதாவியார் நல்கூர்வேள்வியார் தொடித்தலை விழுத்தண்டியார் வென்னிவீசியார் மாங்குடிமருதனார் மலாடனார் போக்கியார் மோசிகீரனார் காரிக்கண்ணனார் மதுரைத்தமிழ்நாயனார் பெருந்தேவனார், உருத்திரசன்மகண்ணர் பெருஞ்சீத்தனார் நரிவெருத்தலையார் செங்குன்றூர்க்கிழார் இளவேட்டனார் கவிசாகரப்பெருந்தேவனார் மதுரைப்பெருமருதனார்

கோவூர்க்கிழார் முதுகூற்றனுர் இழிகட்பெருங்கண்ணனுர் சாத்தனுர் கொடுஞ்செங்கண்ணனுர் வண்ணக்கஞ்சாத்தனுர் களத்தூர்க்கிழார் நச்சுமனுர் அக்காரக்கனி நச்சுமனுர் நப்பாலத்தனுர் குலபதிநாயனுர் தேனீக்குடிக்கீரனுர் மாணிபூதனுர் கவுணியனுர் மதுரைப்பாலாசிரியனுர் ஆலங்குடிவங்கனுர் ஆகிய நாற்பத்தொன்பதின்மரும் பொய்யடிமையில்லாத புலவர் பரமனையேபாடும்விரதத்தையுடையகடைச்சங்கம் வீற்றிருந்த அவதாரமூர்த்திகள். அவர் இயல் இசைநாடகம் ஆகியமுத்தமிழாலும் ஈசுரனைப்பாடி முத்திபெற்றவர். அவர்கள் காலத்தில் இசைநுணுக்கம் என்ற இசை இலக்கண நூல் பயிலப்பட்டது. அன்னவாராலியற்றப்பட்ட இசைத்தோத்திரப்பிரபந்தங்கள்பல. அவைகளை இங்கு விரிக்கிற்பெருகும். அவர்கள் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத்தொகையில் "பொய்யடிமையில்லாத புலவர்க்குமடியேன்" என்று வணங்கப்பெற்றவர்கள்.

திருத்தொண்டர் புராணசாரம்.

பொய்யறியாக்கபிலரொடுபரணராதிப்
புலவோர்பொற்பார்கலைகள்பொருந்தவோதிச்
செய்யுளிடைவளராசுமதுரநல்லசித்திர
* வித்தாரமெனத்தெரிக்குஞ்செம்மை
மெய்யுடையதொடைகளெல்லாமன்றுளாடன்
மேவியகோனிருதாளில்விரவச்சாத்திக்
கையுடையஞ்சலியினராயருளான்மேலைக்
கருதரியவமருலகந்தைக்கொண்டாரே.

* வித்தாரகவி "மும்மணிக்கோவை பன்மணிமாலை மறம் கலிவெண்பா தசாங்கம் மடலூர்தல் கிரீடை இயல் இசை கூத்து பாடண்டத்துறை இவை முதலிய விரித்துப்பாடுவோன்.

ஆசு, மதுரம், சித்திரம், என்னும் கவிபேதங்களை நூல்களிற் காண்க.

கடைச்சங்கம் இருந்து ஏறக்குறைய இற்றைக்கு டுகூ வருடமாகிறது. கபிலராதியர் சங்கமிருந்தகாலம் ஆயிரத்தெண்ணூற்றை

ம்பதிற்றியாண்டு. அதற்குமுன் இடைச்சங்கமிருந்தவர் அகத்திய ஞாாதி ஐம்பத்தொன்பதின்மர். அவர்சங்கமிருந்தகாலம் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு. அதற்குமுன் தலைச்சங்கமிருந்தவர் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் அகத்தியனாாதி நானூற்றுநாற்பத்தொன்பதின்மர். அவர்சங்கமிருந்தகாலம் நாலாயிரத்து நானூற்றுநாற்பதிற்றியாண்டு. தலைச்சங்கம் இடைச்சங்கமிருந்தவர் இலக்கண இலக்கிய ஈசுரத்தோத்திரவிஷயமாய்ச்செய்த இயல் இசை நாடகத் தமிழ்ப்பிரபந்தங்கள் ஆயிரக்கணக்கான பல. இங்ஙனம் விசாரிக்கப்புகில் ஈசுரவிஷயமான கானத்தோத்திரங்கள் எண்ணிறந்தனவாய் அநாதியாய் இருந்துவந்திருக்கின்றனவென்பது ஸ்பஷ்டமாம்.

மேற்கூறிப்போந்த நியாயங்களால் சரியையாளரால் கானத்தோத்திரத்தாலும் கிரியையாளரால் சிவபூஜை கானத்தோத்திரம் இவைகளாலும் யோகியரால் யோகத்தாலும் ஞானிகளால் ஞானத்தாலும் பரமேசுரன் உபாசிக்கத்தக்கவன். யோகி ஞானிகளுக்கும் சிவகானம் சத்கருமமே ஆதலால் யாவரும் பரமேசுரனை இசையோடு புகழ்ந்துபாடிப் பஜனைசெய்யவேண்டும். அவ்வழக்கந் தொன்றுதொட்டிதுகாறுமுளது. அங்ஙனஞ்செய்வது ஞாயந்தான். பரமேசுரனைக் கானத்தோத்திரம்செய்து துதிப்பதற்கு வேதாசம புராணேதிகாச ஆதாரவுகளிருக்கின்றன. கானத்தோடு பரமேசுரனைத்துதித்தல் கூடாதென்பதற்கு ஒரு சாஸ்திரஆதாரவுமில்லை என்று சித்தாந்தம்.

இனி 80 வருடத்துக்குட்பட்ட காலத்திருந்த கானகீர்த்தன் கவனஞ்செய்தோர்களில் வேம்பத்தூர் பாரதியார் பரமேசுரனைப் பாடினர். பாலகிருஷ்ணபாரதியார் பரமேசுரவிஷயமாகவே பாடினர். முத்துச்சுவாமி தீக்ஷிதர் சுமார் 500 கீர்த்தனம் வர்ணம் முதலிய கீதங்களைப்பாடினர். அவைகளில் 400 பரமேசுரவிஷயமாயும் மற்ற 100 விஷ்ணு தேவி விக்கினேசுரன் குகன் சரச்சுவதி இலக்குமி நவக்கிரகங்கள்விஷமாயும் பாடினர். தியாகையர் ஸ்ரீராமபக்தர் ஆதலால் இராமவிஷயமாய்ப்பாடினர். சில சிவவிஷயமாயும் பாடியிருக்கிறார். சாமாவையர் தேவிவிஷயமாய்ப்பாடினர். இ

வர்கள் சென்னை இராஜதானியில் தென்பகுதியில் கானவித்தையில் வன்மையுடையவர்களாயிருந்தமையால் கீதங்களைப்பாடித் தங்களிடம் கானம் பயில்வோரை வேறுகீதங்களைப்படியாமற்செய்து தங்கள் கீதங்களை பாடஞ்செய்யச்செய்து பழைய கீதத்தோத்திரங்களை அப்பிரகாசப்படுத்தித் தந்தங்கீதத்தோத்திரங்களைப் பிரகாசப்படுத்திப் பரவச்செய்தார்கள். அப்படி அவர்கள் முயன்றாலும் பழைய கீர்த்தனங்களும் ஆங்காங்கு படிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் கீதங்களெல்லாம் பாடிவர்ணமெட்டமைத்தவர்கள் அல்லது வர்ணமெட்டுக்களைக் கேட்டுப்படித்தவர்கள் மூலமாய்ப் பயிலவேண்டியிருப்பதால் நவீனகீர்த்தனங்களேபரவநேரிட்டது. இற்றைக்கு வேறு நாலைந்து சங்கீத வித்வான் ஏற்பட்டு வேறுகீதங்களைச்செய்து தங்கள் கீதங்களையே சிக்ஷைசொல்லிவைக்க ஆரம்பித்தால் மேற்சொன்னவர்களின் கீதங்கள் 30, 40 வருஷத்தில் அப்பிரகாசமாய்ப் பிந்தியவர் கீதங்களே பிரகாசத்தையடையும். மேற்கூறிய முச்சங்கங்கள் வீற்றிருந்தகாலங்களில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் அளவற்ற கிரந்தங்கள் இருந்தனவென்று சரித்திரங்களாற்றெரியவருகிறது. இப்பொழுது அக்கிரந்தங்களில் ஒதூல் ஒரு பங்கும் இருக்கக்கண்டிலம். நூதனமாய் அநேகரால் அநேக காவியங்கள் கீர்வாணத்தும் தமிழிலும் செய்யப்பட்டு பலராற் பயிலப்பட்டு வருகின்றன. அதனால் இப்பொழுது நாம் படிப்பனதாம் ஆதியானவைகள் இவைகட்கு முன்னர்க் காவியங்களே கிடையாவென்பது அங்ஙனங் கூறுபவன் அறியாமையாய் முடியுமன்றி வேறென்னும். இசை நுணுக்கம், சுத்தாநந்தப்பிரகாசம், இந்திரகாளியம், சச்சபுடவெண்பா, தாளசமுத்திரம், பஞ்சமரபு, தாளவகையோத்து பரதசேனாபதீயம், குணநூல், கூத்துநூல், சயந்தம் செயிற்றியம், பஞ்சபாரதீயம், முதலிய தமிழ் இசை நாடக இலக்கணங்கள் இப்பொழுது அப்பிரகாசமாயிருக்கின்றன அதனால் தமிழில் இசை இலக்கணமே இன்றென்று கூறுவதழகா?

ஏறக்குறைய 300 வருடத்துக்குமுன் விஷ்ணுவிஷயமாய்க் கீர்த்தனங்களைச்செய்த தாளபாகத்தாருக்கும் அஷ்டபதிசெய்த

ஜெயதேவருக்கும் முற்பட்டகாலங்களிலும் அநேகவிஷ்ணுபக்த
ர்களிருந்து விஷ்ணுவிஷயமான கீர்த்தன கீதங்களைச்செய்து பிர
காசப்படுத்தியிருப்பார்கள். அவைகள் காலாந்தரத்தில் அவர்களு
க்குப்பின்றோன்றிய கான வித்வான்கள் தங்கள் கீதங்களைப் பிர
காசப்படுத்துநிமித்தம் அப்பிரகாசஞ்செய்யப்பட்டும் பாடஞ்செய்
வாரின்றித் தாமே குறைந்தும் போயிருக்கும். தாளபாகத்தார்
ஜெயதேவர் கீதங்களும் தற்காலத்தில் தியாகையர்முதலியவர்கள்
கீதங்களைப்போலப் பிரகாசமடைந்து எல்லாராலும் படிக்கப்பட
வில்லை. இங்ஙனமே சிவகானகீர்த்தனங்களும் பிந்தியவை பிரகாச
ப்பட முந்தியவை அப்பிரகாசப்பட்டு காலாந்தரங்களில் மாறிவரு
கின்றன. எல்லாச்சிவாலயங்களுக்கும் சிவபக்தர்களுக்கும் கீதம்
தினந்தோறும் அவசியமாதலால் தொன்றுதொட்டொருகாலத்து
ம் சிவகானம் இல்லாதிருந்திருக்கலாமென்றூகிப்பதற்கிடனின்று.

இனி உலகத்தில் விஷ்ணுக்ஷேத்திரங்களைக்காட்டிலும் சிவ
க்ஷேத்திரங்கள் எத்தனையோமடங்கதிகம். விஷ்ணு அவதாரமாகி
ய வியாசபகவான் சிவபுராணம் ௰, விஷ்ணுபுராணம் ௪, பிரமபுரா
ணம் ௨, அக்கினிபுராணம் ௧, சூரியபுராணம் ௧; கிரந்தக்கணக்கும்
சிவபுராணம் 263000, விஷ்ணுபுராணம் 55000, பிரமபுராணம்
65000, ஆக்கினேயம் 8000, சூரியபுராணம் 12000, ஆகச்செய்
தனர். புராணங்களெல்லாம் அவ்வத்தெய்வங்களின் புகழ்ச்சியே.
இதைநோக்கியே தீக்ஷிதரும் மேற்கூறியபடி அவ்வத்தெய்வமகத்
துவங்களுக்குத் தக்கபடி அதிகமாயுங் குறைவாயுங் கீதங்களை
யியற்றினர். காயகர், தீக்ஷிதர் கீதங்களைத் தெரிந்தவர். அவைக
ளைக் கற்றுத்தான் இவர் கானவிற்பத்தியடைந்தவர். ஆனால் காய
கர் கூறியபடி விஷ்ணுவுக்கே கானம் உரியது, பரமேசுரனுக்கில்
லை என்ற ஞானம் தீக்ஷிதருக்கு இருந்திருந்தால் பெரும்பாகம்
சிவ விஷயமாய்ச் செய்திருக்கமாட்டார். காயகர் கருத்தின்படி
தீக்ஷிதர் அறியாது தாம் சிவ விஷயமாய்க் கீதங்கள்செய்துவிட்
டார் என்று அறியாமைக்கிரீடத்தை தீக்ஷிதருக்கணிய ஆரம்பி
வித்துவிட்டார், அந்தோ! "அன்னமிட்டவன் வீட்டிற்கன்னமிடு
வதுபோல" தீக்ஷிதர் கீதங்களாற் ஜீவனஞ்செய்துக்கொண்டு

அவருக்கே அறியாமை கற்பிப்பது பாவம்! பாவம்!! இனியாவது விஷ்ணுவாதிகளைக்காட்டிலும் சிவபிரானுக்கே அநேகம்பங்கு அதிகம் கானசம்பந்தமான நிஜஸ்தோத்திரங்களிருக்கின்றனவென்றறியத்தக்கது.

பலன்:

சிவபுண்ணியத்தெளிவு (சிந்தியவிசுவசாதாக்கியம் என்னும் உபாகமப்பொருள்)

துதியுங்கீதமுஞ்சோதிமுன்பத்திபாற்
செதியினோதிடக்கேட்டவர்தாபரம்
மதியில்கீடம்கிருமிவரன்பதி
வதியுமோதினர்க்கென்சொல்வகுப்பதே. (114)

நிருத்தமெங்கைமுன்யாவர்நிகழ்த்தினும்
விருத்தபாநுவயுதம்விரிகதிர்
பொருத்துதேரிற்புலவரரம்பையர்
கருத்தினுடகம்காண்பர்சிவபுரி, (115)

முதலியவற்றாற்காண்க.

3வது

"தேவாரத்துக்குச் சமீபகாலத்தில் சிவபண்டாரங்கள் இசையேற்படுத்தியிருக்கிறார்கள்" என்றனர்.

காயகர் பரமேசுரதூஷணையோடு திராவிடவேத தூஷணையும் பாவம் பழிக்கஞ்சாது செய்தனர். பரமேதிகாசமாகிய சிவரகசியத்தில் ஒன்பதாம் அம்சத்தில் திர்க்கதரிசனமாக அதாவது அவதாரஞ்செய்வதற்குமுன்னமே கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்கள் சரித்திரத்தைக் கயிலாசகிரியில் ருஷிகளுக்குக் கூறியவர் வியாக்கிரபாத மகாமுனிவர் திருக்குமாரரும் சிவபெருமானாலருளப்பட்ட திருப்பாற்கடலையுண்டவரும் ஸ்ரீவிஷ்ணு அவதாரமாகிய கிருஷ்ணமூர்த்திக்குத் திருவடிதீக்ஷைசெய்து சிவபூஜையெழுந்தருளப்பண்ணிக்கொடுத்தவரும் ஆகிய உபமன்னியு மகாருஷி. அதுவே உபமன்னியு பக்தவிலாசம். பிரகத் கதையென்றும் பெயர், அதில் சமயாசாரிய மூர்த்திகள் மூவரும் இசை

யோடுபாடிக் கானஞ்செய்ததாய்ப் பலவிடங்களிற் கூறப்பட்டிருக்கிறது.

தமிழில் பெரியபுராணத்துக்கு மூலமாகத் திருத்தொண்டத்தொகை கூறியவர் சிவபிரானது பிரதிபிம்பமூர்த்தியும், பிர்ம விஷ்ணுக்களு மணுகற்கரிய ஆலகாலவிஷத்தைக் கையினாற்றுங்கியவரும், சமயாசாரியரிலொருவருமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள். அச்சரித்திரத்தை அந்தாதியாக விநாயகக்கடவுளிடங்கேட்டுப்பாடியவர் நம்பிபாண்டார் நம்பிகள். அது (பெரியபுராணம்) சபாநாயகராஞ்ஞைப்படி அநபாய சோழமகாராஜாவின் அநுக்கிரகார்த்தமாய்ச் சேக்கிழார் சுவாமிகளாற் றிருவாய்மலர்ந்தருளப்பட்டது. அச் கேக்கிழார்சுவாமிகள் புராணத்தைச் செய்தருளியவர் தில்லைவாழந்தணரிலொருவரும் சபாநாயகர் விடுத்தருளிய " அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்கொற்றங், குடியாற்கெழுதியகைச்சீட்டுப், படியின்மிசைப், பெற்றான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்கை செய்து, முத்திகொடுக்கமுறை. " என்னும் திருமுகத்தைப்பெற்றுக்கொண்டு பெற்றான்சாம்பானுக்கு உடனே முத்திகொடுத்தருளியவரும் ஆகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியசுவாமிகள். இப் பெரியபுராணமே சிவாலயங்கடோறும் பாராயணஞ்செய்யப்பட்டுவருகிறது, இத்துணைப் பெருஞ்சிறப்புவாய்ந்த பெரியபுராணத்திலேயே பற்பலவிடங்களில் தேவாரம் பாடப்பட்டபொழுதே இசையோடு பாடப்பட்டு அவைகளைப்பாடிய சமயாசாரியமூர்த்திகளும் இசையோடு பாடினார்களென்றும் தேவாரத்தைச் சம்பந்தமூர்த்திசுவாமிகள் இசையோடு கரதாளமிட்டுப் பாடியதைப் பரமேசுரன் கண்டு பொற்றாளமருளியதாயும் கூறப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி முன் 9வது வகுப்பிலும் கூறியிருக்கின்றோம். முழுதுங்கூறிற் பெருகுமாதலாற் சிலவெடுத்துரைப்பாம்.

பெரியபுராணம். திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணம்.

" பாடினார்திருப்பதிகமேழிசையொடும்பயில " (227)
" இசைவிளங்கிடவியல்பினிற்பாடிநின்றேத்தி " (228)
" எழிசையுந்தழைத்தோங்க இன்னிசைவண்
டமிழ்ப்பதிகமெய்தப்பாடி " (104)

" முத்தமிழ்விரகர் "

" இன்னிசையேழுமிசைந்தசெழுந்தமிழீசர்க்கே "

" கைநிறைந்தவொத்தறுத்துக்கலைப்பதிகங்
கவுணியர்கோன்பாடுங்காலை " (102)

" ஏழிசைப்பதிகம்பாடி "

" புணருமின்னிசைபாடினராடினர் பொழிந்தனர்விழிமாரி"(161)

" கானத்தினெழுபிறப்பைக்கண்களிப்பக்கண்டார்கள் "

ஆச்சாபுரத் தலப்புராணம். ஞானசம்பந்தச்சருக்கம்.

" திருப்பதிகம்பாடிநின்றூரவர்மதுரவாயினேங்கு, மின்னிசையுந்
திருத்தாளத்தோங்கியநாதமுநோக்கி "

தடுத்தாட்கொண்ட புராணம்.

முறையால்வருமருதத்துடன்மொழியிந்தனமுதலிற்
குறையாநிலைமும்மைப்படிகூடுங்கிழமையினு
ணிறைபாணியினிசைகோள்புணர்நீடும்புகல்வகையால்
இறையான்மகிழிசைபாடினனெல்லாநிகரில்லான் " (75)

"கண்ணிலாநந்தவருவிநீர்சொரியச்கைமலருச்சிமேற்குவித்துப்
பண்ணினீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார்" 107

"பண்டருமின்னிசைபயின்றதிருப்பதிகம்பாடினார்" (113)

"சந்தவிசைப்பதிகங்கள்பாடி " (123)

திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம்.

"பண்ணார்பதிகத்தமிழ்பாடிப்பணிந்துபரவிப்பணிசெய்தார்" 313

" பண்டோய்ந்தசொற்றிருத்தாண்டகம்பாடி "

இவைகளன்றி திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரத்தில் "சம்பந்தன்சொன்ன வண்ணமூன்றுந்தெரிந்திசைபாடுவார் விண்ணும் மண்ணும் விரிகின்றதொல் புகழாரே "

" ஞானசம்பந்தன்சொன்னமேவியிசைமொழிவார்
விண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே " என்றும்,

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரத்தில்,

" தமிழ்கள்பத்தும்பாடியாடுவார் பரமனடிபோய்ப்பணிவாரே "
என்றுங்கூறினர். இத்யாதி பல பிரபலப்பிரமாணங்களால் தேவா

ரம் சமயாசாரியமூர்த்திகளால் பாடப்பட்டபொழுதே கானத்தோடு பாடப்பட்டதென்றும், பிந்தியகாலத்தொருவராலும் பண்ணேற்படுத்தப்பட்டதல்லவென்றும், தேவாரத்தைப் பண்ணோடு பாடப் பயின்ற நாவுடையார்க்குப் பண்டாரம் என்று பெயரென்றும் நிச்சயப்படுகிறது. ( பண் = இராகம், தாரம் = நா. )

பண்: பெருந்தானமெட்டினும் கிரியைகளெட்டாலும் பண்ணிப் படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று.

பெருந்தானமெட்டாவன:— நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணாக்கும், உதடும், பல்லும், தலையுமென விவை.

கிரியைகளெட்டாவன:— எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என விவை.

இவைகளை விசாரித்துத் தெரிந்துகொள்ளாது தேவாரத்துக்குச் சமீபகாலத்தில் சிலர் பண்ணேற்படுத்தினரென்று கூறுவது எவ்வளவு அநியாயம்! எவ்வளவு பாவம்!! இப்படி நூலாராய்ச்சி செய்யாமையாற் கூறிய வீண் புலப்பத்துக்கும் சமாதானஞ்செசால்ல யாம் பிரவிருத்தித்ததெல்லாம் அவரைச் சங்கீதத்தில் பெரிய வித்வானென்றெண்ணிச் சிலர் மயங்குவதால் அவர் அவ்வழியாய் இத்தகை அநர்த்தவசனங்களையும் மெய்யென்று (தாமும் நூலாராய்ச்சியில்லாராதலால்) மதித்துச் சத்கருமங்களைச்செய்யாது விடுத்துக்கெட்டுப்போகாமற் புத்திகூறவேண்டுமென்னும் இரக்கத்தினாலேயே.

காயகர் பெரிய கானவித்துவான் என்று பலவிடங்களுக்குச் செல்பவர். தாம் சென்ற விடங்களில் தேவாரத்தின் பண்களுக்கு இலக்கணமென்னவென்று கேட்பவருக்கு "எனக்குத்தெரியாது" என்று கூறுவது தமக்கு அகௌரவம் என்றெண்ணி "சமீபகாலத்திற் சிலபண்டாரங்கள் ஏற்படுத்தியது அதற்கு ஏது இலக்கணம்" என்று கூறித்தப்பிக்கொள்ளும்பொருட் டிங்ஙனம் கூறத்துணிந்தனர்போலும். பாவத்துக்குப்பயப்பட்டாரில்லை.

"பாகவதர் என்றசொல் விஷ்ணுபக்தர்களுக்குப்பெயர். கானவித்வான்களுக்கும் பாகவதர்என்றுபெயர். ஆதலால் இசையோடு பாடும்பாட்டு விஷ்ணுவுக்கே உரியது" என்பது.

இதைக்காயகர் தமக்கு தர்க்கம் வியாகரணம் நிகண்டுகளினு ள்ள ஞானத்தை வெளிப்படுத்தக்கூறினர். அதையுஞ் சற்று விசா ரித்துத்தொலைப்பாம்.

கவியென்றசொல் வித்வானுக்குப்பெயர். எருமைக்கும் கவி யென்றுபெயர். ஆதலால் புகழ்ச்சி க்ஷத்திரியற்கே உரியது என் றால் ஒன்றுக்கொன்று எவ்வளவு சம்மந்தமிருக்கிறதோ, ஏது எவ் வளவு அழகாயிருக்கிறதோ விவேகிகளறிவார்கள்.

இனிப்பாகவதர் என்ற சொல் விஷ்ணுபக்தர்களுக்குப் பெய ராக அமரகோசத்திற்படிக்கப்படவில்லை. பகவனையநுசரித்தோர் எனக்கொள்ளில் ஈசன், மாயோன், பங்கயன், சினன், புத்தன் இவ ர்கள் பக்தர்களுக்கும் பெயராகின்றது. மேலும் சூரியன் சித்தியு டையவன், இச்சையுடையான், வீரியமுடையவன், ஞானமுடை யவன், செல்வமுடையவன் முதலியவர்க்கும் பெயர். ஆயினும் பாகவதர் விஷ்ணுபக்தர் என்று தமிழ்நிகண்டிற் கூறப்பட்டிருப் பதால் விஷ்ணு பக்தர்களுக்குப்பெயர் என்றொப்புக்கொள்ளத்தத டையின்று. பாகவதர் என்றசொல் கானம் பாடுவோர்க்குப்பெயர் என்று எந்த நிகண்டிற்கூறப்பட்டிருக்கிறது. கீர்வாணநிகண்டிலா? தமிழ் நிகண்டிலா? ஒரு நிகண்டிலுங்கூறப்படவில்லை. காயகன் அதாவது பாடகனுக்கு அமரகோசத்தில் சாரணன், குசீலன் என் றும் தமிழ்நிகண்டில் இன்னிசைககாரர், கண்டியர், கலம்ர் சூதர், நீலந்தர், சென்னியர், பணவர், பாணர், மதங்கர், மாகதர், வந்தி த்துநிற்போர், வைரியர் என்றுங் கூறப்பட்டதன்றிப் பாகவதர் எ ன்று கூறப்படவில்லை. ஆதலால் பாகவதர் என்றபதத்துக்குப் பா டகர் என்ற பொருள் உண்டென்பதற்குக் காயகர் தமது வாக்கிய த்தையே ஆதரவாகக்கொள்க.

காயகர் தமக்குக் "காயகர்" என்ற பெயரைவைத்துக்கொள்ள லாமென்றால் வேதத்திலேயே காயகசப்தத்தைப்பாணருக்குக்கூறி நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. கீர்வாணநிகண்டிற் கூறிய சாரண சப்தம் பாடியாசித்துத் திக்குகளில்திரிகிறவன் என்று இழிவுபடுத் துகிறது. குசீலன் என்ற சப்தத்தைத் தனக்குப் பெயராகவைத் துக்கொள்ளலாமென்றால் இழிவான நடத்தையுடையவன் என்று

அதிக இழிவுபடுத்துகிறது. தமிழ் நிகண்டில் உள்ள பேயர்களை வைத்துக்கொள்ளலாமென்றால் அவைகளும்கௌரவப்பெயர்களாயில்லை. அன்றியும் வந்தித்துநிற்போர் என்று மிழிவுபடுத்துகிறது என்று பரியாலோசித்து பாகவதர் என்றபெயரையாவது தமக்குச் சுதந்தரப்படுத்திக்கொள்ள இச்சித்தனர்போலும். அதுவும் பாடகர் தன்மையில் சாஸ்திரசம்மதமாய்த் தமக்குப்பொருந்தாதென்றுணர்க.

இனி விநோதத்துக்காகப் பாகவதர் என்ற சப்தத்தை கானவித்வான் என்ற அருத்தமுமுடையதாக வைத்துக்கொள்ளினும் கானவித்வான் சிவனைத்தேவியைப்பாடுபவனாயிருந்தால் அவனுக்கென்னபேரிடுவார்? அவர்களிடத்திலும் பாகவதர் என்ற பெயர் சென்று அதிவியாப்திதோஷத்தைபடையுமே. கிறித்துவ, முகம்மதிமதப்பாடகர்களிடத்தும் வியபிசரிக்குமே. அப்பொழுது அவைக்கென்னசெய்வார். விஷ்ணுசம்பந்தத்தைமாத்திரம் எங்ஙனம் நிலைநாட்டுவார்.

இவைகளையெல்லாம் பரிபாலோசித்தன்றோ முன்னிருந்த வித்வான்களெல்லாம் பாரதி, அய்யர், தீக்ஷிதர்,பிள்ளையென்று தங்கள் பட்டப்பெயர்களையே வைத்திருந்தனர். இவைகளை காயகர் ஏன் யோசித்துப்பார்க்கவில்லை. அதுமாத்திரமா! பாகவதர் என்ற சப்தம் பாடகருக்குப்பெயர் என்னில் தாமென்தம்பட்டப்பெயராகவைத்துக்கொள்ளவில்லை. இவர்விஷ்ணுபக்தருமல்ல? சிவபக்தருமல்ல பங்கயன் சினன் புத்தன் பக்தருமல்ல. ஆதலால் எவ்விதத்தாலும் பாகவதர் என்ற பெயர் பொருந்தவுமாட்டாதெனவறிக.

இனிச்சங்கீதவித்வான் என்ற பெயரையாவது இவர் தரித்துக்கொள்ளலாமோவெனில்? முன் யாம் விவரித்தபடி சம் + கீதம் = நல்லஇசை = தெய்வவிஷயமானகானம் = (சிவகானம்). துர்க்கானம் சிங்காராதிமோகஹேதுவானகானம். காயகர் சிங்காராதிவிஷயகானத்திற்பயில்வர் ஆதலால் அப்பெயருமவருக்குப்பொருந்தாது.

இனி விஷ்ணுவைக்கானஞ்செய்து விஷ்ணுபதம்பெற்ற தாசமார்க்கிகளாகிய பக்தசிரேஷ்டர்களுமுண்டு, அவர்கள் கபீர் தா

சர் முதலியர். அப்பெயர் எத்தெய்வத்தைத் தாசமார்க்கத்தால் உபாசிக்கினும் அவ்வுபாசகர்களுக்குத் தாசர்என்றே பெயர் காளிதாசர், முருகதாசர் முதலியர்போல. ஆதலால் அது பொது.

பரமேசுரன் தேவி விஷ்ணு இவர்களிலொருவரிடத்தும் பக்தியில்லாதவராய் கானமாத்திரம் பயின்று யாசகவிருத்தியிற் றிரிபவர்களெல்லாம் காயகராதி பெயர்களையருவருத்துப் பொதுவாய்த் தெய்வபக்தர் என்ற பொருளால் பாகவதர் என்ற போலிப்பெயர்க் கஞ்சுகத்தில் தம்முண்மைப்பெயரோடு மறைந்து திரிகின்றனர். அவர் பாகவதர் என்ற வேறு பெயர் தரித்துக்கொண்டு திரிவது துக்கத்தை துஷ்டியென்கிற பெயரால் மறைத்துக்கூறுவதுபோல ன்றி வேறொரு ஆதாரவுமின்று. உலகத்தில் துக்கத்துக்கு துஷ்டியென்கிறபெயர் யாவராலும் வழங்கப்பட்டுவரினும், உண்மையில் (சாஸ்திரரீதியாய்)துஷ்டிக்கு சந்தோஷமென்றும், பாகவதர் என்பதற்கு விஷ்ணுபக்தர் என்றும் பொருளேயன்றி துஷ்டிக்குத் துக்கம் என்றும், பாகவதர் என்ற பதத்துக்கு கானவித்வான் என்றும் பொருள் கிடைக்கவேமாட்டா.

ஆதலால் கற்றவர் கல்லாதவர் கானமென்பதைக் கனவிலறியாதவராயினும், விஷ்ணுமூர்த்தியிடத்தில் பக்தி ஒன்றுமாத்திரம் யாருக்கிருக்கிறதோ அவரே பாகவதர் என்ற பெயரைப்பெறுவர். ஆதலால் கானத்தோடு விஷ்ணுமூர்த்தியைப் பாடுபவரென்று என்றும் பொருள்படா. அங்ஙனம் விஷ்ணுமூர்த்தியைக் கானத்தோடு பாடுவோரென்று குறிக்கும் அருத்தத்தோடுள்ளதாய் ஒரு சப்தமுமின்று. பரமேசுரனைக் கானத்தோடு பாடுவோர்க்கு பிர்ம சுரகா, சிவகானவித்து, பண்டா, பண்டாரமென்ற பெயர்களிருக்கின்றன. அவைகளை இங்ஙனம் விரிக்கிற் பெருகும்.

மேற்போந்த நியாயங்களால் பாகவதரென்ற சொல் கானந்தெரியாதவராயினும் படித்தறியாதவராயினும் பக்தியொன்றினாலேயே விஷ்ணுபக்தருக்குப் பெயராமென்றும், கானவிதவான்களுக்குப் பெயராகமாட்டாதென்றும் நியாயவாயிலாய் நிச்சயிக்கப்பட்டது.

ஆதலால் காயகராதி நான்கு வாக்கியங்களும் உபயோகமற்றனவாயினதறிக.

பரமேசுரனைக் கானத்தோடு பாடித்துதிப்பது அதாவது பஜனைசெய்வது அநாதிபாய் நடந்துவரும் வேதாகம சித்தாந்த சத்கருமமென்றும், அங்ஙனஞ்செய்வது சகல மங்களங்களையும் தருமென்றும், தேவாரம் பண்ணோடு தோன்றியதென்றும் ஸ்பஷ்டமாகிறது.

இனித்தேவாரத்தை இராகதாளத்தோடு பாடுகின்றவர்கள் ஆயிரக்கணக்கா யிருப்பதையும், இடங்கடோறும் சிவபஜனைச்சபைகளேற்பட்டு நிகழ்ந்துவருவதோடு சிவபஜனையாலயம் கட்டப்பட்டு சிவபஜனை நடந்துவருவதையும், அப்பஜனைக்கூட்டத்தார் மேற்கூறிய சங்கீதவித்வான்கள் (தியாகையர், தீக்ஷிதர், சாமாவையர்) கான கீர்த்தனங்களன்றி வேறு பற்பலராற் பாடப்பட்ட கீர்த்தனங்களைப் பாடிவருவதையும், அப்படிப் பாடப்படும் சிவபஜனைக் கீர்த்தனங்கள் இன்றைக்குத்தமிழில் மிகுதிக்குமேற்படிக்கப்பட்டுவருகின்றனவென்றும் மைசூர், பல்லாரி, கடப்பை, கிருஷ்ணை, கோதாவரிமுதலிய வடஜில்லாக்களில் வீரசைவர் அதிகமாதலால் கன்னடந்தெலுங்குப் பாஷைகளிலும் சிவபஜனைக் கீர்த்தனங்கள் ஆயிரக்கணக்கா யிருக்கின்றனவென்றும், இன்னும் உத்தரதேசத்தில் சமஸ்கிருதம் இந்துஸ்தானிமுதலிய பலபாஷைகளிலும் ஆங்காங்கு பஜனைக்கீர்த்தனங்களிருக்கின்றன வென்றும்அறிக. அவைகளை விரிக்கிற் பெருகும்.

பஜனையென்ற சப்தத்துக்குகாரபகர் கொண்ட அருத்தத்தையே வைத்துக்கொண்டு சமாதானங்கூறினோம். உண்மையில் பஜனை என்ற சப்தத்துக்கு இராகதாளத்தோடு பாடும் பாட்டு என்று பொருளில்லை. பஜ் என்ற தாது அடைதல், சேவித்தல் (அடிமைவேலைசெய்தல்) என்ற அருத்தங்களில் வரும். ஆதலால் ஈசுர பஜனையென்றால் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற மார்க்கங்களால் ஈசுரனையடைதல் அல்லது புகழ்தல் திருவலகிடல் முதலிய அடிமைத்தொழில் செய்தல், பாடுதல், பாடியாடுதல் நினைத்தல், சிவபூஜைசெய்தல், புராணாதிகளை பக்தியோடு படித்தல் உத்தமதானங்களைப்புரிதல் மந்திரந்தியானித்தல் சமாதிகூடல் முதலிய சத்கருமங்களால் அடைதல் அல்லது அடிமை புரிதல் என்று பொருள்படும். ஆதலால் எவ்விதமாய் ஈசுரனை யுபாசித்தாலும்

ஈசுரபஜனம் என்றே கூறலாம். கானத்தோடு ஈசுரனைப்பாடலும் அவைகளி லொன்றாயிருப்பதால் பஜனையென்றுகூறும் வழக்க மேற்பட்டிருக்கின்றதன்றி அப்பதத்துக்குக் கானத்தோடுபாடல் என்றபொருள் இல்லவே இல்லை. இதைப்பற்றி விரிக்கிற பெருகும், அதிக விநோதமாயுமிருக்கும். பலமில்லாதாரைப் பலகேள்விக ளால வருத்துவதிற் பயனின்றென நிறுத்துகின்றோம்.

காயகர் இனிமேலாவது சிவகானமகிமையை யறிந்து மயக்க மிருந்தால் பெரியாரையடுத்து வினவித் தமது தோஷங்களுக்காக பிராயச்சித்தஞ் செய்துகொண்டு சிவகானஞ் செய்துய்யக்கடவர்.

காயகர் பலவிடங்களில் கானப்பொதுமைக்கு யாம் அகௌ ரவங்கூறுவதாய் பிரஸ்தாபிப்பதாகக் கேள்வி. கானப்பொதுமை யை யாம் கூறேமென்பதை, அறிஞர் நமது வசனங்களா லறிவர். இவர் இம்மட்டோ டமையாவிடில் இரண்டாம் பாகத்தில் ஒவ் வொன்றையும் இன்னுந் தெளிவாய் விவகரிப்பதோடு எஞ்சியவிஷ யங்களையும் இன்னும் விவகரித் தெழுதுவோமென்றறிக.

சூதசங்கிதை: எக்யவைபவ கண்டம்.

"சுருதிசிவாகமமிருதியுரைத்தவைக்குவேறாயதொழில்களெல்லா ம்
பெருகுமகாபாதகமாய்முடியுமிதற்கையமென்னோபேசுங்கா லே"

சங்கமேந்துகைகாரணன்முதலியோர்தம்மை ச்
சங்காசிவசம்புவேசாம்பமாதே வ
வெங்கணாயகவெனத்துதித்தேத்தினும்பா ச
மெங்குமாகியதம்பிரானருளினாலிரியு ம்.

வாசுதேவனைமுதலியோர்நாமத்தால்வண் டு
மூசுகொன்றையான்றிருமுனர்த்தோத்திரமொழியி ன்
வீசுதீரகத்திடைவீழ்வரால்விரைந் து
மாசில்வேந்தனைத்தாசனாய்மதிக்கில்வாழ்வுண் டோ.

சிவபுராணம்: வாயுசங்கிதை.

மாயோன்பகலிலோர்மறையோன்மாய்வான்மாயோன்மாய்ந்திடுவா ன்
காயுமழுவாளுருத்திரனோர்பகலிற்கணிச்சிமற்றவனு ம்
தூயனீறார்மகேச்சுரன்றன்பகலிலிறப்பான்சொல்லவ னு
மேயவுறையுஞ்சதாசிவன்றன்பகலிலிறப்பானென்னுங்கா ல்.

திருச்சிற்றம்பலம்.